472

REGISTERED No. M. 6165. ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JAN 1958
MADRAS

மாத பத்திரிகை

பிப்ரவரி—1958.

விஷயம்.

வான வெளிக்கும் மனிதன் போகிறுன்! ... ... 1

சிறைப் பறவை சிப்கதுல்லா அல்லது
துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... 9

தென்னுட்டு வீர சிங்கம் ஹைதர் அலி
(டி. எப். ஆர். மஆலி ஸாஹிபு-பாகவி) ... 17

மாநிலம் மறக்க முடியாத மாவீரர் ... ... ... 25

தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்
(ரஹ்மத் பாகவி) ... ... ... ... ... ... 29

... இஸ்லாம் ஆபீஸ் :
... ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

18707

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1–50 |
| தனிப் பிரதி நயா பைஸா. | | 13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2–00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

பத்ஹுல் இஸ்லாம்,

20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.


## உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256 பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3–00

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்

பிப்ரவரி—1958.

## வான வெளிக்கும் மனிதன் போகிருன்!

### "இன்னல்லாஹ அலா குல்லி ஷய்யின் கதீர்"

"நிச்சயமாக, அல்லாஹு தஆலா தான், விஷயங்கள் அனைத்தின் மீது மகா சக்தியுடையவனுக இருக்கின்ருன்"

மனிதனுல் என்ன செய்ய முடியும், மனிதனுல் என்ன செய்ய முடியாது என்பது மனிதனுக்கே தெரியாது. கண்ணுக்கு எட்டிய தூரம் பார்த்தே எதையும் மனிதன் முடிவு செய்து கொள்கிருன். அறிவுக்கு எட்டிய அளவே, எதையும் அவன் தீர்மானித்துக் கொள்கிருன்.

ஒரு கல்லைத் தூக்கி வானத்தில் விட்டெறிந்தால் அது என் திரும்பி வந்து பூமியிலேயே விழுந்து விடுகிற தென்பதை வெகு காலத்துக்குப் பிறகே தான் மனிதனுல் தெரிந்து கொள்ள முடிந்தது. நெருப்பிலிருந்து கிளம்பும் புகை வான வெளி மண்டலத்தை நோக்கிப் போகிறது. அது எங்கு போய் சேர்கிறது என்பது மனிதனுக்கு வெகு காலம் தெரியாதிருந்தது. வான வெளி மண்டலத்தில் புகை போல் திட்டு திட்டாக பெரிய உருவத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறதே, அது என்ன வென்று பண்டைக் கால மாந்தனுக்குத் தெரியாமலிருந்து வந்தது. இன்ருே, பள்ளிக்கூடப் பையன்கூட "அது

மேகம்; அதிலிருந்து மழை பெய்கிறது; காற்று அதை தன் போக்கில் ஈர்த்து செல்கிறது'' என்று சொல்லி விடுகிறான்.

பள்ளிக் கூடத்துப் பையனைக் கேட்டுப் பாருங்கள் மழை,எப்படி உற்பத்தியாகிப் பெய்கிறது என்று சொல்லி விடுவான்: ''வெய்யிலின் உஷ்ணத்தால், பூமிலோகத்தில் இருக்கும் தண்ணீர் சூடேறி, ஆவியாக மாறி, கொஞ்சங் கொஞ்சமாக, கண்ணுக்குத் தெரியாமல் ஆகாயத்துக்குப் போய் விடுகிறது. அங்கு மேகங்களில் போய் ஒட்டிக் கொள்கிறது. பிறகு உறைந்து நீராக மாறி விடுகிறது. பிறகு இயற்கைப் பிரகாரம் வீசும் காலக் காற்றானது அந்த மேகத்தை எந்த திசைக்காவது ஈர்த்து செல்கிறது. அங்கு அது மற்றும் மேகங்களோடு மோதி, இடி யோசையாம் பெரும் சப்தத்துடன், தன் பால் உள்ள தண்ணீரை சிதறி கீழே தாரை தாரையாய் கொட்டி விடுகிறது. அது தான் மழை.''

''அந்த மழையின் பொருட்டால் தான், உலகில் உள்ள புழு பூச்சி முதல், மனிதன் ஈறாக யானை முதலிய ஜீவ ஜந்துக்களும் உயிர் வாழ்கின்றன'' என்றும் அந்த பள்ளிக் கூடத்துப் பையன் நமக்கு 'சைன்ஸ்' பாடத்திலிருந்து தான் கற்ற 'இல்மு' என்னும் அறிவை நமக்குப் போதிக்கின்றான்.

இவ்வாறு இயற்கையை ஆராய்ந்து, எண்ணித் துணிந்து ஓர்ந்து பார்த்து 'குத்ரத்' தைக் காணுமாறு நம் திருக் குர்ஆன் ஷரீபில் அல்லாஹுதஆலா நமக்கு பல சந்தர்ப்பங்களில் எடுத்துரைத் துள்ளான்.

முஸ்லிம் களாகிய நாம், மழை பெய்வதையும், வெய்யில் காய்வதையும், நிலவு ஒளிர்வதையும், புற் பூண்டுகள் உற்பத்தியாய் வளர்வதையும், மற்றும் எல்லா இயற்கைச் சம்பவங்களையும் 'குத்ரத்' என்றும் 'பித்ரத்' என்றும், அல்லாஹ்வின் 'ஹிஃமத்' என்றும் சொல்லுகிறோம். இதைக் கொண்டு ''எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உண்டு; அவன் மகா சக்தி வாய்ந்தவன்; அவனே அனைத்தையும் செய்கிறான்; அவனே அனைத்தையும் காக்கிறான்; அவனே அனைத்தையும் அழிக்கிறான்'' என்று ஈமான் என்னும் உறுதிப் பாட்டுடன் பகர்கின்றோம்; நம்புகின்றோம்; பயபக்தி செய்து வணங்குகின்றோம்.

ஆனால், இறைவன் என்றொரு பரம் பொருள் உண்டென்று நம்பாதவர்களும் உண்டு; எல்லாவற்றையும் ஒருவன் சிருஷ்டிக்கிறான்; காக்கிறான்; அழிக்கிறான் என்பதை நம்பாத 'நாஸ்திகர்' களும்

இருந்தே வருகின்றுர்கள். அந்த நாஸ்திகர்கள் 'ஆண்டவன் இல்லை' என்பதற்கு என்ன ஆதாரம் கூறுகிறுர்கள் என்றுல்: "எல்லாம் இயற்கைப் பிரகாரமே நடைபெறுகின்றன; அந்த இயற்கையை விஞ்ஞானத்தின் மூலம் மனிதன் வெல்ல முடியும்; அடக்கி ஆள முடியும்" என்று கூறி வாதாடுகிறுன் அந்த 'சைன்ஸ் வாதி'-நாஸ்திக மாந்தன்.

"சரி, அந்த இயற்கையை சிருஷ்டித்தது யாரப்பா! அந்த இயற்கையை, சிறிதும் பேதக மிலாமல் அப்போதுக்கப்போது நிர்வாகிப்பது யாரப்பா" என்று கேட்டால், "அதுவும் இயற்கை தான்; அது தான் சக்தி" என்று கூறி விடுகிறுன்.

இப்போது உலகில் என்னென்ன அற்புதங்களை மனிதன் சாதித்து வருகிறுன் என்பதை, பத்திரிகை படிக்கும் நண்பர்கள், உலக விஷயங்களை ஆய்ந்துணரும் அறிவாளிகள் நன்கறிந்து வருகிறுர்கள். மனித வர்க்கத்திஞல் எந்தக் காரியம் எளிதில் இயலாமல் இருக்கிறதோ அதை, மனிதரில் அறிவும் ஆற்றலும் படைத்த ஒரு சிலர் துணிந்து செய்து விட, சாதித்துக் காட்ட துணிவுடன் முன் வருகிறுர்கள். இப்படி செய்து, எதையேனும் சாதித்துக் காட்டும் அறிவாளியை சாதகனை-துணிவுள்ளவனை உலகம் பாராட்டுகிறது: அவனது அருஞ் செயலைக் கண்டு, உலக மக்கள் வியப்படைகின்றனர்.

மனிதரால் எளிதில் செய்து முடிக்க வியலாத காரியங்களில் ஒன்று- காக்கை, குருவி, பருந்துகளைப் போல், மனிதன் ஆகாயத்தில் பறக்கும் காரியமாகும். உயரமான சுவர் மீது மனிதன் ஏறவேண்டுமாஞல், அவஞல் தாவிக் குதிக்க முடிவதில்லை. எனவே ஏணியை வைத்துத்தான் மெல்ல ஏறிக் கொள்கிறுன். குரங்கு மனிதனைப் போல் தான் இருக்கிறது என்றுலும், அந்த சுவரேறும் அல்லது மரமேறும் காரியத்தை, அது வெகு எளிதாகச் செய்து முடித்து விடுகிறது. எனினும் குரங்கின் துணிச்சலை மனித வர்க்கம் பாராட்டுவதில்லை; "அது குரங்கின் தன்மை; அது இயற்கை சுபாவம்" என்று கூறிவிடுகின்றேம்.

காக்கை-பருந்து போல பறப்பதற்கு மனிதனுக்கு, இறக்கைகள் இல்லை. காக்கைக் குருவிகளைப் படைத்த இறைவன்தான் மனிதனையும் படைத்தான்; அதற்கு இறக்கைகளை கொடுத்த இறைவன், மனிதனுக்கு இரு இறக்கைகளை கொடுக்க மறந்து விட்டான் என்று யாரும் சொல்ல முடியாது. காக்கையைப் போல் மனிதனும் பறக்க வேண்டு

மானல், அக்காரியத்தை இயற்கைப் பிரகாரம் அவனல் செய்ய முடியாது. ஆனல் "செயற்கைப் பிரகாரம்" செய்ய முடிகிறது. அப்படி முடிந்தும் இருக்கிறது.

மனிதன் ஆகாயத்தில் பறக்க விரும்பி, இன்றைக்குப் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னே முயற்சித்து வந்துள்ளான். முதலில் உயரமான குன்று ஒன்றின் மீது நின்று கொண்டு, வௌவாலுக்குள்ளது போன்ற இறக்கைகளை தன் இருகரங்களின் புஜங்களிலும் பொருத்திக் கொண்டு பறப்பது போல் பாவனை செய்து கீழே குதித்துப் பார்த்தான். அம்முதல் முயற்சியில் தோல்வியைக் கண்டான்; கீழே விழுந்து கை கால்களை முறித்துக் கொண்டான்.

அதன் பின் ஏதேனும் ஒரு ஆசனம் செய்து அதின் மீது அமர்ந்து கொண்டு, அதை ஆகாயத்தில் எழுப்பி போகச் செய்தால், 'ஆகாயத்தில் பறக்க முடியும்' என்று தீர்மானித்தான். அதற்காக என்ன ஏற்பாடு செய்தான் என்ருல்: பெரிய பெரிய நான்கு கழுகுகளை வளர்த்து அவைகளைத் தயார் செய்து கொண்டான்; ஒரு கட்டில் போன்ற ஆசனம் செய்து கொண்டான். அதன் நான்கு மூலைகளிலும் நுகத்தடிகள் செய்து அதனில் பொருந்தியவாறு கழுகுகளை இறுக கட்டிப் போட்டான். இப்படிச் செய்தால், கழுகுகள் ஒன்று சேர்ந்து அந்தக் கட்டிலை ஆகாயத்தில் தூக்கிக் கொண்டு பறக்கும் என்பது அவன் எண்ணம். ஆம். அப்படியே தான் செய்தான்: நான்கு மூலைகளிலும் கழுகுகளின் மூக்குக்கு மேலாக உயரத்தில் வளைவான நான்கு கொக்கிகளை செய்து, கட்டிலில் பொருத்தினன். அந்தக் கொக்கிகளின் முனையில் உரித்த ஆட்டு இறைச்சியை நான்கு முனைகளிலும் அப்படியே கொளுகிப் பொருத்தினன். கழுகுகள் உயரத்தில் காணும் அந்த ஆட்டு இறைச்சிகளைத் தின்பதற்காக ஒருங்கே உயரப் பறக்கத் தொடங்கின. அப்படியே பிணைக்கப் பட்டிருந்த கட்டிலும், கழுகுகள் சகிதம் ஆகாயத்தில் கிளம்பியது; அந்த மனிதன் கட்டில் மீதுள்ள ஆசனத்தை உறுதியாக பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான். கழுகுகள், மாமிசத்தை நோக்கி ஆகாயத்தில் வெகு உயரம் பறந்தன. மனிதனும் அந்த விமானத்தில் மேலே பறந்தான்...

மனிதன் களைத்துப் போனன். கீழே பூமியில் இறங்க நாடினன். கழுகுகளின் மூக்குக்கு மேலே உயரத்தில் கொக்கிகளில் பொருத்தப்

பட்டிருந்த ஆட்டிறைச்சிகளின் விசையை கீழ் நோக்கி சாய்த்தான். இறைச்சிகள் பூமியை நோக்கித் தொங்கவே, கழுகுகள் அந்த இறைச் சியைத் தின்ன, மேலே இருந்து கீழ் நோக்கிப் பறந்தன. மனிதன் உட்கார்ந்திருந்த கட்டிலும் பூமியை நெருங்கியது. சரே ரென்று எல்லாம் தரையில் வந்து வீழ்ந்து மோதி நொருங்கின...

மனிதன் ஆகாயத்தில் பறந்த இரண்டாவது பிரயத்தனம் இது. மூன்ருவது பிரயத்தனம் யாதெனின்: புகைக்கூண்டில் தொத்திக் கொண்டு ஆகாயத்தில் சென்றது- 'கியாஸ்' என்னும் புகை ஆகா யத்தை நோக்கியே இயற்கைப் பிரகாரம் போவதால், உருண்டை வடி வமான கூண்டு செய்துஅதினுள் கியாஸ்-புகை அடைத்து அதின் கீழ் ஒரு தொட்டி செய்து அதில் அமர்ந்து கொண்டு தன் இஷ்டம் போல் ஆகாயத்தில் சிறிது பறந்து ஓய்ந்த பின், கீழே அத்துடன் இணைத்துக் கட்டப் பட்டிருந்த கயிற்றின் மூலம் கீழே பூமிக்குவந்து சேர்வான்.

இப்படியே மனிதன் பற்பல விதங்களாலெல்லாம் இயற்கையை வென்று பற்பல மாதிரியான கருவிகளை உண்டாக்கி ஆகாயத்தில் பறக்கும் வித்தையை மிக விசாலமான முறையில் விருத்தி செய்து கொண்டான்.

இன்று அதோ ஆகாய விமானம் (ஏரோப்ளேன்) என்ருல் குழந் தைகளும் ஆகாயத்தைப் பார்க்கின்றன; ஆகாய விமானம் வானத்தில் பறக்கிற தென்ருல், பட்டிக் காட்டு கிராம வாசியும் இக்காலத்தில் ஆச்சரியப் படுவதில்லை. "ஊம், எவனே பணக்காரன், அல்லது சர்க்கார் ஆசாமி, ஏதோ வேலையாக, அவசரமாகப் பறந்து போகிருன்" என்று சொல்லி, தன் வேலையில் கவனத்தை செலுத்துகிருன்.

காக்கை குருவிகள் ஆகாய வெளியில் நூறு இருநூறு அடி உயரம் தான் பறக்க முடியும்; பருந்து, வல்லூரு கழுகு முதலிய பட்சிகள் சில ஆயிரம் அடி உயரம் தான் பறக்க முடியும். அதாவது மேக மண்டலம் சஞ்சரிக்கும் அளவு உயரத்தில் தான், இயற்கையான முறையில் பட்சி ஜாதிகள் ஆகாய வெளியில் வட்டமிட முடியும்.

ஆனல், இன்று 100 பேர்களை ஏற்றிக் கொண்டு கன வேகமாக, மணிக்கு ஆயிரக் கணக்கான மைல் வேகத்தில் பறக்கும் மாபெரும் 'ஏர் மெயில்' என்னும் ஆகாய விமானங்கள், மேக மண்டலத்தையும் தாண்டி, ஆகாய வெளியில் பல மைல் தூரம் தான் செல்ல முடிகிறது. அதற்கு மேல் நூற்றுக் கணக்கான மைல் உயரத்தில், ஊடுருவிப்

பாய்ந்துச் செல்ல வேண்டு மானல் பெட்ரோல் எரிவதனல் இயங்கும் சாதாரண மான 'ஏரோப் ளேன்' களினல் முடிவதில்லை.

" ஏரோ-பிளேன்" என்ருல் 'காற்று–விமானம்' என்று சாதாரண மாக பொருள் செய்கிருேம். அதற்கேற்ப, இக்காலே பெட்ரோலினல் இயங்கும் (பல) இயந்திரங்கள் பொருத்தப்பட்ட மிக சக்தி பெற்ற பெரிய ஆகாய விமானங்கள் கூட, வான வெளியில் ஆகாய மண்ட லத்தில் மிக உயரமாய்ச் சென்ருலும், எவ்வளவு தூரம் காற்று என் னும் வாயு சலனித்துக் கொண்டிருக்கிறதோ அவ்வளவு தூரம் தான் செல்ல முடிகிறது. அதற்கு மேல் காற்று அலே இல்லாததால், ஆகாய விமான விசிறி இயங்குவதில்லே. இயந்திரம் செயலற்றுப் போய் கீழே இறங்க வேண்டிய தாய் விடுகிறது.

எனவே, காற்று சஞ்சரிக்கும் வாயு மண்டலத்தையும் தாண்டிச் செல்ல வேண்டு மானல், 'ஏரோப்ளேனு'க்குப் பதிலாய் 'ராக் கெட்' என்னும் நூதன அணு எரி பொருள் விசைப் பாணத்தை ஏவி விடு கிருர்கள்.

இந்த நூதனமான 'ராக்கெட்' விசைப் பாணப் பாய்ச்சலில், இன்று ரஷ்ய விஞ்ஞானிகள் முதன்மையாய் முன்னேறி இருக்கிருர்கள். ரஷ்ய விஞ்ஞானிகள் சென்ற நவம்பர் மாதத்தில், ஆகாய வெளியில் 'ராக் கெட்' (பாணம்) மூலம், 'செயற்கைச் சந்திரன்' என்ற ஸ்பூட் னிக் என்னும் (இயந்திரம் பொருந்திய) பெரிய உருண்டையான பொருளே ஆகாயத்திலே- வாயு மண்டலத்தையும் தாண்டி பல்லாயிரம் மைல் உயரத்திற் கப்பால்- எறிந்து விட்டார்கள் என்ற செய்தியை பத்திரிகைகளில் படித்தோம்.

அதைத் தொடர்ந்து அடுத்த மாதம் அதை விடப் பெரிய ராக் கெட் மூலம், ஒரு நாய்க் குட்டியையும் வைத்தடைத்த ஸ்புட்னிக்கை, அதிக வேகமாக முன்னே விட அதிகமான உயரத்தில் எறிந்து விட்டார்களென்பதை நேயர்கள் அறிவார்கள். அந்த இரண்டு செயற்கைச் சந்திரன் எனப்படும் ஸ்புட்னிக்குகள், அன்று முதல் இன்று வரை, வான விதானத்திலேயே பூமியை சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பதாக, விஞ்ஞான அறி வாராய்ச்சி மூலம் அறிவித்து பறை சாற்றப்படுகிறது.

இனி மூன்ருவதாக ரஷ்ய விஞ்ஞானிகளால் ஆகாய வெளியில் அனுப்பப்படப் போகும் பிரம்மாண்டமான ராக்கெட் சகித ஸ்பூட்

னிக்கினுள் ஒரு மனிதனும், வான வெளியில் பிரயாணம் செய்யப் போகிருனும்.

(ரஷ்யர்கள் எதையும் செய்து சாதித்துக் காட்டிய பிறகே, வெளி உலகுக்குச் செய்தி சொல்வது வழக்கம். அம் முறையில் ரஷ்யர்கள், ஆகாய வெளியில் மனிதப் பிரயாணி அடங்கிய ராக்கெட்டை (ஸ்பூட்னிக்கை) எற்கனவே அனுப்பி விட்டார்கள் என்று சொல் லப்படுகிறது.)

இங்ஙனம் மனிதன், உலகில் அபூர்வ காரியங்களை சாதித்த பின், இப்போது வான லோகத்தின் வெளியில், இயற்கை சக்தியை வென்று, ஏதேனும் சாதிக்க முயல்கிருன் என்றே கருதப்படும். அதாவது நீரை, நெருப்பை, காற்றை, மண்ணை, மனிதன் ஓர் அளவு கட்டுப்படுத்தி விட்டதாகச் சொல்லலாம். இப்போது ஆகாயத்தை அதாவது பஞ்ச பூதங்களில் கடைசியான வாயு என்னும் ஆகாயத்தை கட்டுப் படுத்த முயல்கின்ருன். இங்ஙனம் பஞ்ச பூதங்களை (அனுஸிர்களை) மனிதன் வென்று விட்டான்- கட்டுப்படுத்தி விட்டான் என்று பேச்சளவில் சொல்லிக் கொள்ளலாமே யல்லாமல், எல்லாம் வல்ல அல்லாஹு தஆலாவுடைய இயற்கை என்னும் "குத்ரத்தை" வென்று விட்டான் என்று சொல்ல முடியாது.

உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளுக்கும், எல்லாப் பொருட்களுக்கும் இறைவன் ஓரோர் அரிய சக்தியை (தாக்கத்தை) கொடுத்திருப்பதைப் போலவே, சிருஷ்டிகளில் சிறந்தவனை மனிதனுக்கும் ஒருவகை விசேஷ தாக்கத்தை (சக்தியை) கொடுத்திருக்கிருன். இதைக் கொண்டே மனிதன் இயற்கையை- பஞ்ச பூதங்களை- நான்கு அனுஸிர்களை ஜெயிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிருன்.

ஆனல், அல்லாஹு தஆலாவுடைய மகாப் பெரும் பெருமித குத்ரத் என்னும் பெருங் கடலில், மனிதன் ஒரு சில துளி அளவில் மட்டும் தான் தெரிந்து கொண்டானே யல்லாமல், ஆண்டவனுக்குப் போட்டியாய், இயற்கைக்கு மாருக ஒரு அணுவையும் அசைத்துவிட அவனல் முடியா தென்பது உண்மை.

"இன்னல்லாஹ அலா குல்லி ஷய்யின் கதீர்" (அல்லாஹ்வே அனைத்துப் பொருள் மீதும் மகா சக்தியுடையவன்.) அல்லாஹு அக்பர்.

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

தமிழ் நாட்டு முஸ்லிம்களது நன்மைக்காக திருக்குர்ஆனின் தப்ஸீரை தமிழ் பாஷையில் மிகவும் விளக்கமாகவும், தெளிவாகவும், சங்கை பொருந்திய ஸுன்னத்து வல்ஜமாஅத்தின் உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, மிகப் பிரயாசையோடு யாவரும் ஆமோதித்து புகழத்தக்க விதமாய் விளக்கத்தோடு இத் தப்ஸீரை எழுதி அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம்.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்து அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** இந்த தப்ஸீர் ஸூறத்து பாத்திஹா—பகரூவி லிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼-ஜுஸூ வரை இதன் விலை ரூ. 10–00

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தௌபா முடிய (சுமார் 5-ஜுஸூ) இரண்டாம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

**மூன்றாம் பாகம்:** ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-ஸூருக்களின் தப்ஸீர் மூன்றாம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூரத்து நூர் முடிய 8 ஸூராக்களின் தப்ஸீர் நான்காம் பாகமாக வெளி வந்திருக்கிறது. இதன் விலை ரூ. 10–00

(5-ம் பாகம் அச்சாகிறது.)

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

## அத்தியாயம் 16.

"உம்மத் உணவு இல்லத்" துக்கு அவர் சென்ற போது ஆச்சரிய சமாசாரம் அவருக்குக் காத்திருந்தது. மரியம் சென்று விட்டாள், எங்கு சென்றாள் என்பது எவருக்கும் தெரியாது. அவள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் அவளைத் தேடி அவளது கணவனும் சென்று விட்டிருந்தான்; இருவரும் திரும்பி வரவில்லை. அவளை யாரோ டெலிபோனில் கூப்பிட்டார்கள்; ஆனால் அவர் தமது பெயரைச் சொல்லவில்லை.

"அவளது கணவன் திரும்பி வாராததற்கான காரணமெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் அந்தப் பெண் எங்கு இருக்கிறாள் என்பது பற்றி உனக்கு ஒன்றுமேதெரியாதா?" இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"இல்லை, தெரியவே தெரியாது"

"அவளது தந்தை இங்கு வந்தாரா?"

அவன் சிறிது தயங்கினான்.

"ஆம், அவள் காணாமற் போன போது அவர் அவளது அறையில் இருந்தார். உண்மையில், அவளைப் பற்றி காப்டன் காதிரி இங்கு விசாரித்துக் கொண்டிருந்த போது அந்த அறையில் அவர் காணப்பட்டார். பணியாள் அவரை அடையாளம் கண்டு கொண்டான். ஆனால் அவர் வந்ததையோ அல்லது சென்றதையோ அவன் பார்க்கவில்லை."

கரீமுல்லா கானின் மாளிகைக்குச் சென்ற போது, கான் சாஹிப் அங்கு இல்லை என்பது ஊர்ஜிதமாயிற்று பணியாள் பரீது பதிலளித்தான். மரியமைப்பற்றி அவன் எதுவும் கேள்விப்படவில்லை. உண்மையை உரைக்குமிடத்து, மோசடி நிகழ்ந்திருக்கிறது என்பதை முதன் முதலில் அப்போது தான் அவன் கேள்விப் பட்டான். இன்ஸ்பெக்டரை மற்றொரு ஏமாற்றமும் எதிர் நோக்கி யிருந்தது. சிப்கத்துல்லாவைக் கண்டு பிடிப்பதற்காக அனுப்பப்பெற்றிருந்த துப்பறியும் உத்தியோகஸ்தர் திரும்பி வந்திருந்தார். பணியாள் பஹதூரின் கூற்றுப்படி, சிப்கத்துல்லா அவசரம் அவசரமாக வந்து உடை மாற்றிக் கொண்டு சென்று விட்டார். சிறு தோல் பெட்டியுடன் வெளிக்கிளம்பிய "சிறைப் பறவை" சென்ற இடம் அவனுக்குத் தெரியாது.

நடு நிசியில் விசாரித்ததில், காதர்கான் உயிரோடு இருக்கிறான் என்பதும் ஆனால் மூர்ச்சையுற்று இருக்கிறான் என்பதும் தெளிவாயிற்று. அவனது வயிற்றிலிருந்து தோட்டா வெளியே எடுக்கப்

பட்டிருந்தது. அவன் உயிர் பிழைத்து விடுவான் என்று உறுதியாக நம்பப் பட்டது. மாலையில் அவனது தந்தை அவனைக் காண வந்திருந்தான். கவலை, கோபம் மேலிட்டு அவன் அரைப் பைத்தியமாகி விட்டிருந்தான்.

"காலைக்குள் அவன் முழுப் பைத்தியமாகாவிடில், ஆச்சரியப் பட வேண்டியது தான்" என்றார் சர்ஜன். "அவனையும் இங்கேயேதங்கி யிருக்கச் செய்து பித்தம் தெளிய மருந்து கொடுக்கப் போகிறேன்."

இன்ஸ்பெக்டர் புறப்படத் தயாரான சமயத்தில், வேலூரி லிருந்து டெலிபோன் வந்தது; கரீமுல்லா கானின் வீட்டைக் கண் காணித்து வருவதற்காக கோட்டைப் போலீஸாரின் உதவியை அவர் நாடியிருந்தார்.

"12-15 மணிக்கு கான் சாஹிபும் அவரது கனிஷ்ட புத்திரியும் தனித் தனி காரில் வீடு வந்தார்கள். ஒருவர் வந்த இரண்டொரு நிமி டங்களுக்குப் பிறகு மற்றவர் வந்தார்."

மேற் கண்ட தகவல் கிடைத்ததும் கரீமுல்லா கானின் வீட்டுக்கு நேரே செல்லலாமென அவர் நினைத்தார்; ஆனால் அவ்வாறு செய்வது உசிதமல்ல வென்பதை உடனே உணர்ந்து கொண்டார். விரைவாகச் செல்லும் போலீஸ் "ஜீப்"பில் அவர் அமர்ந்ததும் வேலூரை நோக்கி அது பறந்தது. நிலா வெளிச்சம், ரஸ்தாவின் சீரான நிலை ஆகிய வற்றின் காரணமாக வெகு சீக்கிரம் கான் சாஹிபின் வீட்டுக்கு முன் போய் கார் நின்றது. கார் வந்து நின்ற ஓசை கேட்டதும் கரீமுல் லாவே வெளியே வந்தார்.

"யார் அங்கே?" என்று குரல் கொடுத்துக் கொண்டே வெளி முற்றத்துக்கு வந்த அவர், இன்ஸ்பெக்டரின் பதில்குரலைக் கேட்டதும் வியப்பிலாழ்ந்தார்.

"இன்ஸ்பெக்டர் சாஹிப், என்ன தவறு நேர்ந்து விட்டது? ஏதாவது விசேஷம் உண்டா?"

"காதர்கான் சுடப் பெற்று காயமுற்றிருக்கிறான். காதர்கான் யார் என்பது உங்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன்."

"எனக்குத் தெரியும். அவ்விஷயம் எனக்கு வருத்தமளிக்கிறது. காதர் சுடப் பெற்றானா? எப்படி? எங்கே? எவரால்?"

"9-45க்கும் 10-0க்கு மிடையே அவன் சுடப் பெற்றிருக்கிறான். கிளப் இன்ஸானியத்தில் இச்சம்பவம் நிகழ்ந்திருக்கிறது."

"உள்ளே வாருங்கள். என் மகளிடம் விஷயத்தைச் சொல்லி விடாதீர்கள். அதிர்ச்சி அடைந்திருக்கும் அவள் இன்றிரவு இந்த சமாசாரத்தைக் கேட்டால் மூர்ச்சித்து விழுந்து விடுவாள். காதர் கானைப் பற்றிக் கடு களவும் கவலைப்படவில்லை. அவன் இறந்து விடு வதையே நான் விரும்புகிறேன். அவனது மரணத்தை நான் பெரிதும் விரும்புகிறேன்; அவனை மட்டும் நான் பிடித்து விடுவேனாயின்......"

அவர் பேச்சை முடிக்க வில்லை; அவரது கையை இன்ஸ்பெக்டர் பிடித்துக் கொண்டார்.

"இந்த விஷயத்தில் நீங்கள் உஷாராக இருக்க வேண்டும். பொறுப்பில்லாமல், பொறுமையில்லாமல் பேசக் கூடாது. உங்கள் மீதும் சந்தேகம் இருந்து கொண்டிருக்கிறது. காதர்கான் சுடப் பெற்ற சமயத்தில் கிளப் சுற்று வட்டாரத்தில் நீங்கள் இருந்திருக் கிறீர்கள்."

"ஆம், கிளப் சமீபத்தில் நான் இருந்தது வாஸ்தவம் தான். அங்கு நான் காத்துக் கொண்டிருந்தேன். ஒரு காரியத்துக்காக நான் காத்துக்கொண்டிருந்தேன். உம்மத் உணவு இல்லத்துக்கு நான் சென்றேன்; ஆனால் எனது மகள் அங்கிருந்து சென்று விட்டிருந்தாள்- உங்களிடம் அவர்கள் இவ்விஷயத்தைச் சொல்லியிருப்பார்கள் என்று எண்ணுகிறேன்— பிறகு நான் 'கிளப் இன்லானியத்'துக்குச் சென்றேன். அருவருக்கத்தக்க அணங்கு ஜீனத்தைக் கண்டேன். காதர் கானின் கையாட்களில் அவள் ஒருத்தியல்லவா"?

"உண்மையை உரைக்குமிடத்து, அவள் அவனது மனைவி."

கரீமுல்லாகான் அதிர்ச்சி அடைந்தார்.

"அவனது மனைவியா? இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அவளது குற்றங்களை மன்னித்து விடுகிறேன். அவள் அரக்கியாகி இருந்தாலும் அவளை நிதானிக்க முடிகிறது. அந்த மோசடி எப் போதும் எனக்கு அருவருப்பு அளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவள் அவனது மனைவி என்பதைக் கேள்வியுற்று சந்தோஷப் படுகிறேன்... அந்தப் பயலைச் சுட்டது யார்?"

"எனக்குத் தெரியாது. ஆனால் அதற்காகச் சிப்கத்துல்லாவைச் சிறைப் பிடிக்கப் போகிறேன்."

கரீமுல்லா கான் கவலையும் பயமும் கொண்டவராக வாயைப் பிளந்து கொண்டு நின்றார்.

"நீங்கள், சிப்கத்துல்லாவைச் சிறைப்பிடிக்கப் போகிறீர்களா? நீங்கள் பேசுவது இன்னதென்பதைப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது போலும். அந்த இழி வான செயலைச் சிப்கத்துல்லா செய்யவில்லை; செய்திருக்கவும் மாட்டார். அந்த சுற்று வட்டாரத்தில் அப்போது அவர் இருக்கவில்லை."

"இல்லை, சிப்கத்துல்லா அங்கு இருந்தார். சுடப்பெற்ற சமயத்தில் அல்லது அதற்கு மறு நிமிடம் அந்த அறையில் அவர் இருந்திருக்கிறார். "லிப்ட்" இயக்கும் சிப்பந்தி உண்மை உரைத்து விட்டான். காதர் இறந்து விட்டால் அதற்காக சிப்கத்துல்லாவைச் சிறைப் பிடிக்கப் போதுமான காரணம் கற்பிக்கும் வகையில் அவனதுசாக்ஷியம் அமைந்துள்ளது."

"சிப்கத்துல்லா அங்கிருந்தாரா?"

"கான் சாஹிப், மனம் விட்டு நான் பேசுகிறேன். அது நீங்கள் தானென்று நினைத்தேன்."

கரீமுல்லாவையே இனயத்துல்லா உற்றுக் கவனித்தார். "சுற்று வட்டாரத்தில் நீங்கள் இருந்திருக்கிறீர்கள் என்று நான் கேள்வியுற்ற தும் உங்களுக்கு உண்மை தெரிந்து வந்திருக்கிறீர்கள் போலும் என்று நினைத்துக்கொண்டேன். நீங்கள் காத்துக் கொண்டிருக்கக் காரணமென்ன?"

"அதனை உங்களுக்குச் சொல்ல முடியாது, ஆம் இப்போது சொல்ல முடியாது. சிப்கத்துல்லா அங்கு இருந்திருந்தாரானல் அவரை நான் பார்த்திருப்பேன். ஜீனத்தைப் பார்த்தேன். என்னை அவள் அடையாளம் கண்டு கொள்வாளோ வென்று அஞ்சினேன். அவளும் அதே அபிப்பிராயங் கொண்டிருந்தாள் என்று எண்ணு கிறேன். அருகிலிருந்த ஹோட்டலுக்குச் சென்றேன். 9-45 முதல் 10 மணி வரை அங்கு நான் இருந்தேன். உங்களுக்கு அத்தாக்ஷி வேண்டுமானல், அந்த சமயத்தில் அங்கு இருந்தேன் என்பதை நிரூபிக்கவும் முடியும். ஐயோ, பாவம்! சிப்கத்துல்லா!"

இருவரும் ஹாலில் இருந்தனர். யாரோ துரிதமாக நடந்து வரும் காலடி ஓசை கேட்டது. கதவுப் பக்கத்தில் மரியம் நின்று கொண்டிருந்தாள்.

"அது யார்? சிப்கத்துல்லா சாஹிபா? ஓ இன்ஸ்பெக்டர் சாஹிபா! எதாவது விசேஷ முண்டா?" இருவர் முகத்தையும் பயங்கரத்தோடு அவள் மாறி மாறிப் பார்த்தாள், "சிப்கத்துல்லா சாஹிபுக்கு எதாவது நேர்ந்து விட்டதா?"

"சிப்கத்துல்லாவுக்கு எதுவும் நேர்ந்து விடவில்லை." அவளை அவர் சாந்தப்படுத்தினர். கரீமுல்லா கானை உற்று நோக்கினர். "மரியம், இந்த விஷயத்தை நீ தெரிந்து கொள்ள வேண்டும். உன்னை நான் பெயரிட்டு அழைப்பதற்கு உரிமை பெற்றிருக்கிறேன்; ஐந்தாவது வயது முதல் உன்னை நான் அறிவேன். காதர் கான் சுடப்பட்டார்."

"அவர் சுடப்பட்டாரா?" அவள் அதிர்ச்சியுடன் வின வினள் "அவரைச் சுட்டது யார்?"

"எனக்குத் தெரியாது. அந்த உண்மையைக் கண்டு பிடிப் பதற்குத்தான் நாங்கள் முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு வேளை உன்னல் உதவி செய்ய முடியும். ஹோட்டலை விட்டு நீ புறப்பட வேண்டிய காரண மென்ன? உன்னுடன் சிப்கத்துல்லாவும் வந்தாரா?"

அவள் "இல்லை" யென தலையசைத்தாள்.

"சிப்கத்துல்லா சாஹிபை நான் பார்க்க வில்லை. ஆனல் அவருக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஹோட்டலில் பெண் சிப்பந்தி யொருத்தி இருந்தாள்" தந்தையை பீதியோடு நோக்கி ஞள் "அவள் ஹோட்டல் திருடி அல்லது அந்த ரகத்தைச் சேர்ந்தவளை

என்று எண்ணுகிறேன். அவள் அங்கு திருடுவதற்காக இருந்தாள். அவள் ஒரு தடித்த மலையாள மாது.”

“மலையாள மாது என்று சொல்கிறாய்? அவளது பெயர் என்ன?”

“ஜனுபா நாருன்னிஸா. அவளைப்பற்றி சிப்கத்துல்லாவுக்குத் தெரிந்திருந்தது. என்னைச் சந்திக்கும் வரை என்னைக் கவனித்துக் கொள்ளுமாறு அவளுக்கு அவர் டெலிபோன் செய்திருந்தார். ஹோட்டலை விட்டு வெளியே அழைத்து வந்தாள். நாங்கள் இருவரும் நடந்து சென்றோம். அப்போது விந்தையான சம்பவமொன்று நிகழ்ந்தது. நீங்கள் வந்த போது என் தந்தையிடம் நான் அவ்விஷயத்தைத்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். நாருன்னிஸா—அவள் பருமனான பெண்.”

“அவளை எனக்குத் தெரியும்.”

“அவள் திடீரென மறைந்து விட்டாள். அவளைப் பூமி விழுங்கி விடவில்லை. அவள் சொல்லாமலும் செல்ல வில்லை. என்னிடம் அவள் திடீரெனச் சொன்னாள்: ‘அன்பே, உன்னை நான் விட்டுப் பிரிந்து விட வேண்டும். அந்த மனிதன் என்னைப் பார்க்க வேண்டுமென நான் விரும்ப வில்லை.’ அவள் யாரைப் பார்த்துப் பயப்படுகிறாள் என்பதை அறிந்து கொள்வதற்காகச் சுற்று முற்றும் பார்த்தேன். தீங்கு விளைவிக்காத, அப்பாவி மனிதர்கள் தான் அங்கு சென்று கொண்டிருந்தனர். திரும்பிப் பார்த்த போது நாருன்னிஸா தலை தெறிக்க வேகமாக நடந்து கொண்டிருந்தாள். அவளை நான் திருப்பிக் கூப்பிட விரும்ப வில்லை. அப்போது எனக்கு சமீபமாக மனிதரொருவர் வந்தார். அவர் கவலை தோய்ந்த முகத்தோடு காணப்பட்டார். அவர் நடுத்தர வயதுள்ளவர். உங்களிடம் நான் கூற வில்லையா, பாவா?”

கரீமுல்லா தலை யசைத்தார்.

“அவர் தொப்பியைக் கழட்டினார்—அவரது மயிர் நரைத்திருந்தது. நான் தான் கரீமுல்லா கானின் மகளா என அவர் விசாரித்தார்.”

‘பாதுகாப்பான இடத்துக்கு உன்னை அழைத்துச் செல்லட்டுமா, அம்மா’ என அவர் அன்பாக வினவினார். ‘அந்த தடிப் பெண்ணுடன் நீ காணப்படுவது கூடாது என்பது எனது எண்ணம்?’ என்ன செய்வதெனத் தெரியாமல் திணறினேன். நான் மிகவும் பீதியடைந்திருந்தேன். எந்த மனிதனும் எனக்குப் பாதுகாப்பு அளித்தால் போது மென்றிருந்தது. ஆகவே, அவரது ஆறுதலான வார்த்தைகளைக் கேட்டதும் சந்தோஷப் பட்டு சம்மதித்தேன். அவர் டாக்ஸியைக் கூப்பிட்டதும் தயக்கமின்றி அதில் ஏறி அமர்ந்து கொண்டேன். அவர் மிக நல்ல மனிதர். கால நிலை பற்றியும் கடவுள் பக்தி குறித்தும் அவர் பேசிக் கொண்டிருந்தார். சென்னை பிராட்வே வரும் வரை அவர் ஆத்மிக விஷயங்களைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்.

"பிராட்வேயா? உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?"

"ஆம், அந்த இடம், அது பிராட்வே ரஸ்தாவின் கோடியில் பெயர்ப் பலகையில் பிராட்வே என பொறிக்கப்பட்டிருந்ததைப் பார்த்தேன். பக்கத்து வீதியிலிருந்த வீட்டுக்கு என்னை அவர் அழைத்துச் சென்றார். வீட்டு விவசாரங்களைக் கவனித்துக் கொள்ளும் பெண் என வயோதிக மாது ஒருத்தியை அவர் அறிமுகம் செய்து வைத்தார்."

"அவர் எதைப் பற்றிப் பேசினார்?"

"தப்லீக் ஜமாஅத் விவகாரம் பற்றிப் பேசினார். 'தொழுகையின் அகமியம் என்ன, தெரியுமா?' அறிஞர்களான ஆடவர்களுக்கே தெரியாதிருக்கும் பொழுது பேதைப் பெண்ணான உனக்கு எப்படி தொழுகையின் தாத்பரியம் தெரியப் போகிறது? தொழுகை—ஏன், எதற்காக என்பதாவது உனக்குத் தெரியுமா? தொழுகையினால் விளையக் கூடிய பலாபலன்களை யாவது தெரிந்து வைத்திருக்கிறாயா?' அவர் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருந்தார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரது வினாக்களுக்கு விடையளிக்க இயலாமல் தயங்கினேன். அவரது எண்ணம் பற்றி வினவிய போது, அவர் நேரடியான பதிலளிக்காமல், பழைய படியே பரமார்த்திக விஷயங்களை விளக்கலானார். அவரது பேச்சு வியப்பும் விநோதமும் அளிப்பதாக விருந்தது. சரியாகப் பத்து மணிக்கு எனக்காக ஒரு கார் வந்து வாசலில் நிற்பதைக் கண்டேன். "உன்னை நான் உனது வீட்டுக்கு அனுப்பப் போகிறேன்" என்று இதமாக அவர் எடுத்துரைத்தார்.

"அந்த வீட்டிலிருந்த காலமெல்லாம் அவருடனேயே நீ இருந்து கொண்டிருந்தாயா?"

அவள் "இல்லை"யென தலையசைத்தாள். "அவருடன் சிறிது நேரம் தான் பேசிக் கொண்டிருந்தேன்; இல்லை, அவர் தான் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். மிச்ச நேரம் அவருடைய வீட்டுக் காரியங்களைக் கவனிக்கும் வயோதிக மாதுடன் இருந்தேன். அவள் தப்லீக் பற்றிப் பேசவில்லை, 'தையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள் அவர் டெலிபோன் செய்து கொண்டிருந்த சமயத்தில் அவளுடன் நான் இருக்க வேண்டியதாயிற்று' அவரது குரலிலிருந்து அவர் டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார் என்பதை விளங்கிக் கொண்டேன்.

"உனது வீட்டுக்கு உன்னை அவர் கொண்டு வந்து விடவில்லையா?"

"இல்லை, என்னை காரில் ஏற்றி விட்டார். நான் பத்திரமாக வீடு போய்ச் சேர்வேன் என்று உறுதி கூறினார். எனது தந்தை வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு நான் வீடு வந்து சேர்ந்தேன்."

"உனது விருத்தாந்தம் வியப்பு அளிப்பதாக விருக்கிறது. தடித்த மலையாள மாது யார் என்பது எனக்குத் தெரியும். ஆனால்

தப்லீஃ பற்றி பேசிய இந்த மனிதர் யார் என்பதை என்னுல் புரிந்து கொள்ள முடிய வில்லே. எந்த வகையிலாவது அவரது பெயரை நீ கேட்டதில்லேயா?"

அவள் "இல்லே" யென்பதற்கு அறி குறியாக தலே யசைத்தாள்.

"வீட்டு நம்பர் உனக்குத் தெரியுமா?"

"ஆம், எனக்குக் கவனமிருக்கிறது. ஆனுல் அவர் அதனே மறந்து விடுமாறு என்னே அவர் வற்புறுத்தினுர். அவ்வாறே அதனே நானும் மறந்து விட்டேன். எனது......"

"உனது மில்லே, ஒன்று மில்லே. அக்கயவன் கலியாணமான வன்—ஜீனத்தை மணந்து கொண்டிருந்தான்" கரீமுல்லாகான் பேசினுர். "நான் மோசம் செய்யப்பட்டேன். அந்தப் பெண் என் வீட்டில் வேலேக்கமர்ந்தது ஒரு காரியத்துக்காக என்பதை நான் உணர்ந்து கொள்ள வில்லே. அவள் உண்மையானவளாக இருந்தால் அந்த சம்பளத்துக்கு அவள் வேலேக்கு வந்திருக்கவே மாட்டாள். பணியாள் பரீத் எப்போதும் அவள் மீது சந்தேகம் கொண்டவனுகவே இருந்தான்."

"சிப்கத்துல்லா ஸாஹிபை நீங்கள் பார்த்தீர்களா?" இன்ஸ்பெக் டரை அவள் வினவினுள். "இல்லே, அவரை நான் பார்க்க வில்லே. அவரை வெகு சீக்கிரம் பார்க்க வேண்டு மென நினேத்துக் கொண்டி ருக்கிறேன்."

அவளுக்குத் திடீரென ஞானேதயம் ஏற்பட்டது. பெரு மூச்சு விட்டுக் கொண்டே அவள் கேட்டாள்: "அவரை சிப்கத் துல்லா சுட்டார் என்று நீங்கள் நினேக்க வில்லே யல்லவா? நீங்கள் அவ்வாறு நினேக்கவும் முடியாது."

"வாஸ்தவத்தில் அவனே அவர் சுடவில்லே." கரீமுல்லாகான் சொன்னுர். "அவ்வாறு நினேப்பது விபரீதமானது. ஆனுல் எல்லா சாத்தியக் கூறுகளேயும் இன்ஸ்பெக்டர் ஆராய்ந்தறிய வேண்டு மென் பதையும் நீ நினேவில் கொள்ள வேண்டும். இன்றிரவு சிப்கத்துல் லாவை உங்களால் கண்டு பிடிக்க முடிய வில்லேயா?".

அவர்களிருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். கரீமுல்லா பெருமூச்சு விட்டார்.

"என்ன முட்டாள் தனம்! என் இறைவா, என்ன முட்டாள் தனம்!"

"பாவா, இக்காரியத்தை சிப்கத்துல்லா சாஹிப் செய்திருக்க மாட்டார். இன்ஸ்பெக்டர் சாஹிப், அவ்வாறு நினேப்பது தவறு. ஒரு மனிதரை சிப்கத்துல்லா சுடுபவரல்ல. அவரை எவராவது பார்த்தார்களா? அவர் எவ்வாறு சுடப்பெற்ருர்" என்று வினவினுள் மரியம்.

"காதர்கான் பின்புறமிருந்து சுடப்பட்டிருக்கிறான்."

"அப்படியானால் அது சிப்கத்துல்லா சாஹிப் அல்ல. பின்புற மிருந்து ஒரு மனிதரை அவர் சுடமுடியாது"

புன்னகை ததும்ப இன்ஸ்பெக்டர் சொன்னார்: "நீ படுக்கைக் குச் சென்று நிம்மதியாக தூங்குவது நல்லது, அம்மா ஒரு நாள் முழுவதும் நீ காய்படாதபாடு பட்டிருக்கிறாய். ஆகவே ஓய்வும் அமைதியும் உனக்கு அவசியம் தேவைப்படுகின்றன. கான் ஸாஹிப் அவளுக்குக் கண்டிப்பாக கட்டளை யிடும். அது யார்?"

—அவர் திரும்பிப் பார்த்தார். "பரீது" கரீமுல்லாகான் பதிலளித்தார். அவன் போடும் செருப்பு அருவருப் பூட்டுகிறது. பல மைல் தூரத்திலிருந்தாலும் அவனது செருப்பு சத்தத்தைக் கேட்டு அவனது வருகையை தெரிந்து கொள்ளலாம். இப்போது அவன் கதவைத் திறந்து யாரையோ உள்ளே விடுகிறான்—நம் மனிதர் களி லொருவர் போலும். அல்லது உங்கள் டிரைவருக்குத் தேநீர் கொண்டு கொடுக்கப் போகிறான் போலும். டிரைவர்களிடத்தில் பரீது பிரீதி கொண்டிருக்கிறான். இயந்திரங்களை இயக்குவதில் அவர்களது திறமையை அவன் பாராட்டுகிறான்."

மரியம் மிக அமைதியாக நின்றிருந்தாள். மிக மிருதுவான குரலில் அவள் சொன்னாள்: இப்பயங்கர விஷயம் உண்மையாக விருக்குமா? எந்த விதத்திலும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். இன்ஸ்பெக்டர் சாஹிப்! சிப்கத்துல்லா சாஹிப் இம்மாதிரி இழிவான குற்றத்தைச் செய்தி ருக்க மாட்டார் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். அது வேறு யாராவது இருக்க வேண்டும். காதர்கானின் கூட்டாளிகளி லொரு வனாக விருக்க வேண்டும், அல்லது அவர் மீது விரோதமும் குரோத மும் கொண்டவனாக விருக்க வேண்டும். அநேகர் அவரை வெறுக் கின்றனர்; இந்த உண்மையை அவரே என்னிடம் எடுத்துரைத்தி ருக்கிறார். அவர் கேலி செய்கிறார் என்று அப்போது எண்ணினேன். அவர் நல்ல மனிதர்; நாணயமிக்கவர். கலியாண ஏற்பாட்டுக்கு இணங்குவதன் மூலம் உங்களைத் திருப்திப் படுத்துவதற்கு முயற் சித்தது பைத்தியக்காரத் தனம் என்பதை இப்போது உணர்கிறேன்."

கரீமுல்லாகான் தலையசைத்தார்.

"நீ பைத்தியக்காரியாக விருந்தால் நான் குற்றவாளி. உலகில் உனக்கு உகந்த மணாளன் ஒருவன் தானிருந்தான்........"

கதவு திறந்தது. பரீது உள்ளே வந்து, "உங்களைப் பார்க்க சிப்கத்துல்லா வந்திருக்கிறார்" என்றான்.

[தொடரும்]

# தென்னாட்டு வீர சிங்கம் ஹைதர் அலி.

(கி. பி. 1761-முதல், 1782-வரை)

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

நம் ஹிந்துஸ்தானத்தில், மகா சக்கிரவர்த்தி ஷஹின்ஷாஹ் ஆலம்கீர் அவுரங்கஜேப் பாதுஷாவின் அரசாக்ஷி நடைபெற்றுக் கொண்டிருந்த காலம்.

ஹஜ்ரத் அவுரங்கஜேபின், சிம்மாஸனம் டில்லிமா நகரில் இருந்த போதிலும், அப்போது அவரது ஆட்சி பீஜாபூர், மைசூர், மராட்டா, தென்நாடு முதலிய பிரதேசங்களி லெல்லாம் வியாபித்திருந்தது. ஆங்காங்கு அதிகாரிகளாய் தனது பிரதிநிதிகளையும், காப்பாளர்களாய் சேனாதிபதிகளையும், வரிவசூலிப்பவர்களாய் தாஸீல்தார்களையும் நியமித்து, நல்லாட்சி புரிந்து வந்துள்ளார்.

மைசூரும் அக்காலே, தனியாட்சியாக இருந்தபோதிலும், ஹஜ்ரத் அவுரங்கஜேபுக்கு கப்பம் கட்டி அடங்கி யிருந்து வந்தது.

கி. பி. 1680-ம் ஆண்டு வீர சிவாஜி மன்னர் இறந்து போன பிறகு, மராட்டா தேசத்தில் அமைதியும் ஒழுங்கும் நிலவி யிருக்கவில்லை. சுமார் ஏழாண்டுவரை அராஜகம் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. எனவே, ஆலம்கீர் அவுரங்கஜேப், தன் படை பலத்தால் பீஜாப்பூர் கோட்டையையும் மராட்டிய ராஜ்யத்தையும் பிடித்துக் கொண்டு, ஆட்சி நடத்தி வந்தார்.

### யக்கோஜியின் தகாத செயல்

அக்காலே, பீஜாப்பூர் அரசாங்கத்தின் சார்பாக மராட்டா மன்னனான ஷாஹ்ஜீக்கு பெங்களூரின் 'ஜாகிர்' தரப்பட்டிருந்தது. விவசாயிகளிட மிருந்தும் தகுதியானவர்களிட மிருந்தும் மாசூல் வரியும் மற்றும் வரிகளும் வசூலித்து, பீஜாப்பூருக்கு அனுப்ப வேண்டியது ஷாஹ்ஜீயின் பொறுப்பு.

ஷாஹ்ஜி இறந்து போய் விட்டார். அப்போது தமது ஜாகீர் ஆட்சியை, தனது இரண்டாவது குமாரனான யக்கோஜி இடம் ஒப்படைத்துச் சென்றார். அப்போது யக்கோஜி, தமிழ் நாட்டில் தஞ்சாவூருக்கு அதிகாரியாக இருந்து வந்தார்.

யக்கோஜி ஒரு துணிச்சலான பேர்வழி. பூனா முதல் செஞ்சிக் கோட்டை வரை, எதேச்சாதிகார ஆட்சி செலுத்தி வந்த சிவாஜியின் அரசையும்; அவரது அதிகாரிகளையும் அப்போது யக்கோஜி எதிர்த்து வந்துள்ளார். அப்படிப்பட்ட நிலையில் பீஜாபூரையும் பெங்களூர் மற்றும் பகுதிகளையும் அவ்ரங்கஜேப் ஆக்கிரமித்து ஆட்சி புரிவது

யக்கோஜிக்குப் பிடிக்க வில்லை. எனவே எதிர்ப்பாக சூழ்ச்சி செய்ய லானு.

கி. பி. 1686-ல் யக்கோஜி, தன் ஜாகிர் பிரதேசமான பெங்களூரை, தஞ்சாவூரில் இருந்த வண்ணமே, மைசூர் ராஜாவுக்கு 3-லக்ஷம் ரூபாய்களுக்கு விலைக்கு விற்று விட்டார். அத்துடன் ராஜாவுக்கு உதவியாக ஒரு சிறு படையையும் அனுப்பி வைத்தார்.

## தளபதி காஸிம்கான் பெங்களூர் வருகை

யக்கோஜியின் செயல், ஷஹின்ஷா ஆலம்கிருக்குப் பிடிக்க வில்லை. அப்போது அவ்ரங்கஜேப், தக்ஷிணத்தில் இருந்து வந்தார். தனது நம்பிக்கையுள்ள அதிகாரியான தளபதி காஸிம்கானை ஏவி, பெங்களூரை பிடுங்கிக் கொள்ளுமாறு உத்தரவிட் டனுப்பினர்.

தளபதி காசிம்கான், பெரும் முயற்சி எடுத்து பெங்களூரை ஆக்ரமித்துக் கொண்டு விட்டார். யக்கோஜியின் தஞ்சாவூர் படை வழியிலே இருந்ததால், எதிர்க்க முடிய வில்லை; இவ்வாறே, விலைக்கு வாங்கிய மைசூர் ராஜாவின் படைகளும் தூரத்தில் இருந்ததால், பெங்களூர் மீது தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ளாமல் பின் அடைந்து போயினர்.

வீர தளபதி காசிம்கான், தன் திறமையினல் பெங்களூர் முதலிய பிரதேசங்களில் உறுதியாக பிரதிநிதி ஆட்சி செலுத்தி நல்ல பெயர் பெற்ருர். எனவே, ஷஹின்ஷாஹ் ஆலம்கீர் அவரை, பாலாகாட் என்ற மாகாணத்துக்கு அதிபதியாக (படை பலமுள்ள திவாணுக) நியமனம் செய்து வைத்தார்.

இச்சம்பவத்துக்குப் பிறகு, தளபதி காசிம்கான் அநேக பாளையக்காரர்களை அடக்கி ஆண்டு வரி (கப்பம்) வசூலித்து பாதுஷாவுக்கு அனுப்பி வந்தார். இதுமட்டு மல்ல, மைசூர் ராஜாவுங் கூட, முகலாய அரசாங்கத்துக்கு சிரம் பணித்து நடந்து கொண்டார்.

## காஸிம் கானின் துரோகம்

நல்லவன்கூட அதிகாரத்துக்கு வந்தால் கெட்டவனுக மாறிப் போவது, சரித்திர வழக்கமாய் இருந்து வருகிறது. எனவே, காசிம் கானும் பெங்களூரை 3-லக்ஷம் ரூபாய்க்கு மைசூர் ராஜாவுக்கு விலைக்கு விற்று விட்டான். ஆனுல் மைசூர் ராஜா இதற்கு அனுமதிகோரும் முறையில், ஷஹின்ஷா அவுரங்கஜேபுடைய தர்பாருக்கு பல சன்மானங்களை அனுப்பி வைத்து, அபிமானம் தெரிவித்துக் கொண்டார். அப்போது மைசூரை (பெங்களூரையும்) ஆண்டுக் கொண்டிருந்தவர் 'சச் தேவராயர்' என்பவராவர். அவுரங்கஜேப், அதை ஏற்றுக் கொண்டார்.

## மைசூர் ராஜாக்கள் காலம்

மேற்கூறப்பட்ட சக் தேவராயர் கி. பி. 1704-ம் ஆண்டு இறந்து போய் விட்டார். அவரது மந்திரி பிரதானிகள் அரசாங்கத்தை, தங்கள் இஷ்டம்போல் நடத்தி வந்தனர். எனவே, தங்கள் இஷ்டப் படி குந்திரேவா உடையார் என்பாரை, தங்கள் ராஜ சிம்மாஸனத் தில் அமர்த்தினர். குந்திரேவா உடையாருக்குப் பிறகு மூன்று ராஜாக்கள் சிம்மாஸனத்தில் ஏறி இறங்கினர்கள். அதன் விபரம்:—

கி. பி.:—1704-முதல் 1713-வரை குந்திரேவா உடையார்.
1713-முதல் 1731-வரை டட்ட கிருஷ்ண ராஜஉடையார்.
1731-முதல் 1734-வரை ஏழாவது சாமராஜ உடையார்.
1734-முதல் 1766-வரை கிருஷ்ணராஜ உடையார்.

## (ஹைதர்) ஓர் அதிர்ஷ்டமுள்ள முஸ்லிம் வீரர்

மைசூர் ராஜ்யத்தை ஆண்டு வந்த கிருஷ்ணராஜஉடையாரின் சேனையில் ஒரு முஸ்லிம் வீரர் இருந்து வந்தார். அவருக்கு அதி ருஷ்டச் சக்கரம் சாதகமாய் சுழன்று கொண்டிருந்தது. அவர் பொருட்டால் மைசூருக்கே நல்ல பெயர் உண்டாயிற்று.

அந்த முஸ்லிம் வீர சிப்பாயின் பெயர் என்ன தெரியுமா? 'ஹைதர் அலி' என்பதாகும். தென்னாட்டு வீர சிங்கமாய் விளங்கிய ஹைதர்அலி இவர்தான். இவர் பொருட்டால், மைசூர் ராஜ்யம் உலகப் புகழ்பெற்ற தென்னலாம்.

ஹைதர்அலி, மைசூர் ராஜாவிடம் சாதாரண ஒரு சிப்பாயாக இருந்து முன்னுக்கு வந்து கொண்டிருந்த காலத்தில், மைசூர் ராஜ்யம், அடிவேர்கல்லப்பட்ட விருக்ஷம் போல் கலகலத்து ஆடிக் கொண்டிருந்தது. முதலில் மராட்டியர், அடிக்கடி படையெடுத்து வந்து மைசூரை தாக்கி, அலைக்கழித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் ஆற்காட்டு நவாபுடைய படைகளும், மைசூரைத் தாக்கி, அடிக்கடி தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தன. அப்போது, நவாப் நாஸிர்ஜங் என்பார் ஆற்காட்டை ஆண்டு கொண்டிருந்தார்.

## ஹைதர் அலியின் முதல் சேவை

ஒரு பக்கம் மராட்டியர்களாலும், மறு பக்கம் ஆற்காட்டார் களாலும் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த மைசூர் ராஜ்யத்தில், மந்திரி பிரதானிகளால் தூண்டப்பட்ட உட்குழப்பமும் தலைவிரித் தாடியது. ஒரு மந்திரி, ராஜாங்கத்தையே கவிழ்ப்பதற்கு முனைந்து, அரண்மனை மீது பீரங்கிப் பிரயோகமும் செய்தனன்; இதனல் ராஜா அவன் சொற்படி இணங்க வேண்டியதாயிற்று.

ராஜாவின் தர்ம கஷ்டங்களை கவனித்த ஆற்காட்டு நவாப், மைசூர் ராஜாவுக்கு அனுதாபியாகி, சில வழிகளில் உதவி செய்ய முன் வந்தார். ஒரு சமயம், ஆற்காட்டு மன்னன் நவாப் நாஸிர் ஜங்குக்கு, பிறர் உதவி தேவையாய் இருந்தது. எனவே, நவாபின் வேண்டுகோளின்படி, மைசூரிலிருந்து ஒரு படை ஆற்காட்டுக்கு அனுப்பி வைக்கப் பட்டது. அந்த படைக்கு தளபதியாய் செல்லும் பேறு பெற்றவர் நம் வீர சிப்பாய் ஹைதர் அலிதான்.

## ஹைதரின் திருச்சி விஜயம்

அதன் பிறகு ஆற்காட்டு ராஜ்யத்துக்கு நவாப் வாலாஜாஹ் முஹம்மது அலி என்பார், 'நவாப்' ஆனார். இவர் அக்காலே மைசூர் அதிபதியாய் இருந்த நந்தராஜின் உதவியை நாடினார். அப்போது மைசூர் படை நவாபுக்கு உதவியாக, தமிழ் நாட்டின் ஒரு பட்டண மான திருச்சினாப்பள்ளி போகவேண்டியதாயிற்று. இந்தப் படைக்கும் நம் வீர முஸ்லிம் ஹைதர்அலியே தளபதியாக இருந்து திருச்சிக்குப் போய், தன் வீரத்தை வெளிப்படுத்தினார்.

அதற்கு முன்னெல்லாம், ஹைதர்அலி, மைசூர் ராஜ்யத்தின் சேனைகளில் ஒரு சாதாரண சிப்பாயாக மட்டுமே இருந்து வந்தார். 'தேவனஹள்ளி' என்ற இடத்தில் ஒரு முறை போர் மூண்டது. அப்போர்க் களத்தில் வீரசிங்கம் ஹைதர்அலி, மகத்தான வீரத் தன்மை காட்டி நற்பெயர் பெற்றுக் கொண்டார். அதைப் பார்த்து மைசூர் மகாராஜா ஹைதர் அலியிடம் ஒரு தனி பட்டாளத்தை ஒப் படைத்து 'தளபதி' பட்டத்தையும் விருதையும் வழங்கினார். இப் படிப்பட்ட பதவி அக்காலே "நாயக்" என்றழைக்கப்பட்டு வந்தது.

## ஹைதர் அலி திண்டுக்கல் 'கவர்னர்' ஆனார்.

திருச்சினாப் பள்ளிப் போர்க் களத்தில், வீர சிங்கம் ஹைதர் அலி மகத்தான காரியங்களை சாதித்தார். அவரது வீரத்தன்மையும் ராஜ தந்திரமும், மைசூர் மந்திரி பிரதானிகளால் பெரிதும் பாராட்டப் பட்டன. மந்திரி நஞ்ச ராஜ் என்பார், ராஜாவின் அனுமதி பெற்று ஹைதர் அலியை, தமிழ் நாட்டில் திண்டுக்கல் பிரதேசத்துக்கு ராஜப் பிரதி நிதியாக (கவர்னராக) நியமித்து கௌரவப் படுத்தினார்.

ஹைதர் அலி, மைசூரை விட்டுப் போய் திண்டுக்கல்லில் உத்தி யோகம் புரிந்து வந்த காலத்தில், மைசூருக்கு 'சனீஸ்வரன் விஜயம் செய்தான்'. மைசூருக்கு மராட்டியர்களால் மீண்டும் பல தொல்லைகள் ஏற்படலாயின. மராட்டியர்கள், பல திக்கிலும் மைசூரைத் தாக்கினர்.

முன்னர் பல சமயம், மைசூர் ராஜ்யம் படை பலக் குறைவினால், நல்ல தளபதி இல்லாமையால் தோல்வியுற்று, மராட்டியர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டியதாயிற்று. அப்படி 'தண்டப் பணம்'

கொடுக்க மைசூர் கஜானாவில் ரொக்கப் பணம் இல்லாது போனதால், மைசூரைச் சேர்ந்த பல சுற்றுப்புற ஊர்களும் மராட்டியர்களிடம் அடமானமாக ஒப்படைக்கப் பட்டிருந்தன. இதை யெல்லாம், இது தான் சமயம் என்று, மராட்டியர்கள் சுய நலமாய் ஆக்கிரமித்துக் கொள்ளத் தொடங்கி விட்டனர்.

## மீண்டும் ஹைதர் அலி மைசூர் விஜயம்.

மராட்டியர்கள் தங்களிடம் ஒப்படைக்கப் பட்டிருந்த ஊர்களை ஆக்கிரமித்துக் கொண்டதோடு, மேலும் ஏராளமாக 'தண்டப் பணம் கொடு' என்று மைசூர் ராஜாவை நிர்ப்பந்தித்து வந்தனர். அங்ஙனம் உடனே தண்டப் பணம் கொடுக்க ராஜாவால் முடியாது போகவே, ஸ்ரீரங்கப் பட்டணத்தை மராட்டியர் முற்றுகையிட்டு விட்டனர்.

சதிமங்கலத்தில் அப்போது இருந்து வந்த மந்திரி நந்தராஜ், எப்படி எப்படியோ கொஞ்சம் பணம் திரட்டி அதை மராட்டியர்களுக்கு அனுப்பி, ஸ்ரீரங்கப்பட்டணத்தின் மீது படையெடுப்பதை விட்டு விடுமாறு வேண்டிக் கொண்டார். மூர்க்க மராட்டியர் அதற்கு இணங்க வில்லை. எனவே, வீர சிங்கம் ஹைதர்அலி, திண்டுக்கல்லிலிருந்து, வரவழைக்கப் பட்டார்.

## மைசூரைக் காத்தார் ஹைதர்.

மராட்டியர்களை எதிர்த்து விரட்டக் கூடிய சக்தி பெற்றவர் முஸ்லிம் வீரர் ஹைதர்தான் என்பதை அப்போது உலகம் உணர்ந்து கொண்டது. ஹைதர்அலி, தம் ராஜ தந்திர வீரப் பராக்கிரமத்தினால், மைசூர் பிரதேசங்கள் அனைத்தையும், முரட்டு மராட்டியர்களின் பிடியிலிருந்து விடுவித்துக் காப்பாற்றித் தந்தார்.

அது மட்டுமல்ல, மைசூர் அரசாங்கத்தின் மந்திரிப் பிரதானி களுக்குள் நுழைந்து கொண்டிருந்த 'ஊழல்' என்னும் வியாதியையும் போக்கினார்— அரசியல் ஹக்கீம் ஹைதர் அலி; அதாவது, ராணிகளு டைய வேண்டுகோள் பிரகாரம், ஹைதர் அலி, அரசியல் விஷ யங்களில் தலையிட்டார். ராஜாவுக்கும் மந்திரிகளுக்கும் இடையில் தீராப் பிணியாய் இருந்த அபிப்பிராய பேதங்களை களைத் தெறிந்தார்.

துணிச்சலாக அரசர் அனுமதி பெற்று, சில மந்திரிகளை பதவி யை விட்டு விரட்டித் துரத்தினர் ஹைதர்.

ஹைதர் அலியின் மகத்தான உதவிக்கு மைசூர் மகா ராஜா மிகவும் மனம் மகிழ்ந்தார். அதற்காக ஹைதரை பாராட்ட வேண்டு மல்லவா? எனவே, சகல சேனைகளுக்கும் ராணுவ இலாக்காவுக்கும் வீரர் சிங்கம் ஹைதர் அலியையே, பிரதம சேனாதிபதியாகவும் ராணு வதிகாரியாகவும் நியமனம் செய்து வைத்தார்.

## ஹைதரின் ராணுவ நிர்வாகம் கண்டு பீதி

ஹைதர் அலி ராணுவ நிர்வாகத்தை ஏற்ற பின், முதன் முதலாய் உழைக்கும் சிப்பாய்களின் சம்பளப் பிரச்னைகளை கவனித்தார். அவர்களின் பசிப்பிணியை போக்க மார்க்கம் தேடினார். நெடுங் கால மாக, சரிவர கொடுக்கப் படாதிருந்த சம்பள பாக்கிகளை யெல்லாம் கொடுத்துத் தீர்த்தார். எனவே, சேனை வீரர்களெல்லோரும், ஜாதி மத பேதமின்றி, தலைவர் ஹைதர் அலியை, ஏழைகளை "ஆதரிக்கும் அண்ணல்" என்று கொண்டாடினர். ஹைதர் காலால் இடும் பணி யை சிரசால் புரியத் தொடங்கினர்.

இங்ஙனம் எல்லா சிப்பாய்களும் உதவி சேனாபதிகளும், ஹைதர் அலியின் சொற்படி நடந்து அவரது துதியையே பாடத்தொடங்கவே, ராஜாவுக்கும் ராணிகளுக்கும் ஒரு வகையான பயம் ஏற்பட்டு விட்டது. "ஒருக்கால், ஹைதர், எல்லா சேனைகளையும் தூண்டி, ராஜ்யத்தையே கைப்பற்றிக் கொண்டால் நாம் என்ன செய்வது" என்ற பீதி ஏற்பட்டு விட்டது.

## கண்டேராவின் சதிச்செயல்

ராஜாவிடம் கண்டேராவ் என்ற மராட்டியன் ஒருவன் மந்திரி யாக இருந்து வந்தான். இவனை முன்னர் ஹைதர்அலிதான் ஆத ரித்து, ராஜாவிடம் சிபாரிஷ் செய்து மந்திரியாக்கி வைத்தார். இவன், அயோக்கியன் என்பது ராஜா—ராணிகளுக்குத் தெரியும்.

எனவே ராஜா, அந்த கண்டேராவை தனிமையில் சந்தித்து, "ஹைதர்அலியை எப்படியாவது ஒழித்துக் கட்டினால்தான், மை சூருக்கு ஏற்பட்டுள்ள அபாயம் நீங்கும்" என்று வேண்டிக் கொண் டனர்.

துரோக வலையை வீசினான் கண்டேராவ். உடனே, மராட்டிய தலைவர்களுக்கும் பேஷ்வாக்களுக்கும் ரகசிய ஓலைகள் அனுப்பினான்:— "மைசூர், மிகப் பூர்விகமான ஒரு ஹிந்து ராஜ்யம். அதை ஒரு ஹைதர் என்ற ஒரு முஸ்லிம் அபகரித்துக் கொள்ள முற்பட்டிருக் கிறான்; இச்சமயம், வீர ஹிந்துக்களாகிய நீங்கள் வந்து, ஹிந்து ராஜா வுக்கு உதவி செய்யா விட்டால், மைசூர் ராஜ்யமே முஸ்லிம்களின் 'ஸல்தனத்' ஆய்விடும். விரைந்து வாரீர்; வாக்கு தாரீர்" என்பது அந்த வேண்டுகோள் வாக்யம்!

## மைசூருக்குள் மராட்டியப் படையும் ஹைதர் தந்திரமும்

மராட்டியத் தலைவர்கள், கண்டேராவின் கோரிக்கைக்கு இணங்கி-வாக்களித்தனர். ஒரு பெரிய மராட்டியப் படை, மை சூருக்கு வந்து சேர்ந்தது.

வீரத் தியாகி ஹைதர்அலிக்கு, அப்போதுத் தான் விஷயம் தெரிந்தது. தன் தலைக்கு மேல் ஆபத்து வந்து விட்ட தென்பதை உணர்ந்தார். மைசூர் படைகளை மராட்டிய படைகளுடன் மோத விட்டால், பல சிப்பாய்கள் வீணே மாண்டு மடிய நேரலாம் என்றஞ்சினர். முதலில் தன் உயிரை காத்துக் காரியம் புரிய வேண்டுமென, மைசூர் தலை நகரை விட்டுத் தப்பி, முதலில் ஸ்ரீரங்கப்பட்டணம் போய்ச் சேர்ந்தார்; பிறகு அங்கிருந்து பெங்களூர் வந்து சேர்ந்தார்.

ஹைதர்அலி, பெங்களூரில் பாதுகாப்பாக இருந்து கொண்டு, அந்தத் துரோகி கண்டேராவை எப்படி பழிவாங்க வேண்டுமென்று திட்டம் போடலானர்:

## மராட்டியரை வென்ற மாவீரர்

கண்டேராவை மட்டும் கொன்று தீர்த்து விடுவதென்றால், அது வீர ஹைதருக்கு ஒரு விளையாட்டு. ஆனால் சரியான படி திட்டம் போட்டு மைசூர் ராஜ்ய மக்கள் அனைவரையும் காக்க வேண்டு மென்பது ஹைதர்அலியின் குறிக்கோள்

முதலில் ஹைதர்அலி, தனிப்பட பட்டாளங்களை சேர்க்கலானர். நம்பிக்கையும் அபிமானமுமுள்ள வீரர்கள் பலர் (ஹிந்து–முஸ்லிம் என்ற வேற்றுமை யின்றி) ஹைதரின் ஆள் பலத்தில் (பட்டாளத்தில்) சேர்ந்தனர்.

ஹைதர் தனியே போய் பெரும் படை திரட்டுகிறார் என்று கேள்விப்பட்டதும், மராட்டியர்கள் விழித்தெழுந்து கொண்டனர்.

ஒரு பக்கம் மைசூர் ராஜாவின் படைகள், கண்டேராவின் தலைமையில் திரண்டு வந்தன–ஹைதரைக் கவிழ்க்க! மற்றொரு புறம் மராட்டியர்களின் பெரும் படை வீறு கொண்டெழுந்தது-ஹைதரை ஒழித்துக் கட்ட.

இரு படைகளும் பெங்களூரை நோக்கி வந்தன. அங்கு ஒரு பெரும் போர்க்களம் வியாபித்தது. போர் மூண்டது. இரத்தவெள்ளம் ஓடியது; எண்ணற்ற தலைகள் உருண்டன; மதிப்பற்ற சடலங்கள் மண் மீது கிடத்தப்பட்டன. இருபுறத்திலும் தான் சேதம். ஆனால் வெற்றி வீரஹைதருக்கே! ராஜாவின் படைகளும் மராட்டியப் படைகளும், ஹைதரின் வீர சேனைகளின் தாக்குதலை சகிக்கொணமல், தோல்வியடைந்து போனர்கள்.

## "ஸ்ரீரங்கப்பட்டண அதிபர் வாழ்க!"

கி. பி. 1761–ம் ஆண்டு, தென்னாட்டு வீர சிங்கம் ஹைதர்அலி, ஸ்ரீரங்கப்பட்டணத்தை பரிபூரணமாக பிடித்து, ஆதிக்கங்கொண்டு அதிபதியானர். மக்கள் "ஹைதர் அதிபர் வாழ்க" என்று ஆரவாரம் செய்து முஸ்லிம் வேந்தனை வாழ்த்தினர்.

அப்போது, மைசூர் ராஜ்யம் முழுவதின் வாழ்வும் தாழ்வும், ஒரு சாதாரண முஸ்லிம் சிப்பாயா யிருந்த அண்ணல் ஹைதரின் கையில் தான் இருந்தன. மைசூர் ராஜ்யம் முழுவதையும் பிடுங்கிக் கொண்டு, மைசூர் ராஜபரம்பரையையே இல்லாமலொழித்திருக்க அண்ணல் ஹைதரால் முடிந்திருக்கும். ஆனால் அருங்குணன் அப்படிச் செய்ய வில்லை.

ஹைதர் அண்ணல் என்ன செய்தார்? தோல்வி கண்ட அரசனை அரியாசனத்திலே இருக்குமாறு வகை செய்து வைத்தார். மூன்று லக்ஷம் ரூபாய் வருமானமுள்ள பூர்வீக ஜாகிர் பகுதிகளைக் கொடுத்து அதை ஆண்டனுபவிக்க, பட்டா எழுதிக் கொடுத்து விட்டு, ராஜ்யத்தின் மற்ற பிரதேசங்களைத் தன் ஆதிக்கத்தில் கொண்டு வந்தார்.

## நவாபும் முகல் மன்னரும் ஆதரித்தனர்

அந்த ஆண்டில், வீரர் ஹைதருக்கு மற்றிரு பெரும் ஆதாவுகள் கிடைத்தன:—

1. அக்காலை ஹைதராபாதை (தக்காணத்தை) நிர்வாகம் கொண்டிருந்த நவாப் பஸாலத் ஜங் பஹாதுர் என்பார், ராணுவ உதவி யளிப்பதாக ஹைதருடன் நல் உறவு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

2. மேலும் அவர், வடநாட்டை அக்காலை ஆண்டு கொண்டிருந்த முகலாய மன்னர் ஷாஹின்ஷாவின் சிபாரிஷ் பெற்று, 'ஸரா' என்ற மாகாணத்துக்கு ஹைதர்அலியை 'சூபேதார்' ஆக்கி வைத்தார்.

இத்தியாதி அனுகூலங்களால், தென்காட்டு வீர சிங்கம் ஹைதர் அலி, சட்ட பூர்வமான முறையில், மைசூர் ராஜதானி முழுமைக்கும் அதிபதி ஆனார். [தொடரும்]


# வின்ஸ்டன் சர்ச்சில்

சென்ற மஹா யுத்தத்தில் பிரிட்டன் பிரதமராக யிருந்து, பிரிட்டன் சரித்திரத்திலேயே மிக நெருக்கடியான ஒரு சமயத்தில் தலைமை வகித்து வந்த வின்ஸ்டன் சர்ச்சிலின் சரித்திர சுருக்கம். இதன் விலை ரூ. 0-52

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

# மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

(4)

மூவாயிரம் டாலர் கேட்கலா மென எடிசன் எண்ணினர். ஐயாயிரம் டாலர் வேண்டு மெனக் கேட்கலாமோ என்று அவர் தயங்கிக் கொண்டிருந்தார், பின்னர் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, ஜெனரலை நோக்கி "நீங்களே ஒரு தொகை கூறி விடுகிறீர்களா?" எனக் கேட்டார்.

நாற்பதினாயிரம் டாலர் தருவதாக அவர் தெரிவித்தார். பிரிண்டரின் உரிமையை ஜெனரல் லெபர்ட்ஸுக்கு அளித்து விட்டு அவர் அளித்த செக்குடன் எடிசன் பாங்க்கிற்குச் சென்றார்.

பாங்க் பொக்கிஷதார் அந்த செக்கை அவர் மீது வீசி யெறிந்து, "கை யெழுத்துப் போடு" என்று கூச்சலிட்டார்.

செவிட்டின் காரணமாக அவ்வார்த்தைகளை எடிசன் தவறாகப் புரிந்து கொண்டார். செக்கிற்குப் பணம் அளிக்க பாங்க் மறுக்கிறது போலும் என எண்ணிக் கொண்டு ஜெனரல் லெபர்ட்ஸிடம் சென்றார். அறிஞரின் அறியாமையைக் கண்டு சிரித்த வண்ணம் அவருக்குச் செக்கில் எவ்வாறு கையெழுத்திடுவது என்பதை அந்த ஜெனரல் கற்றுக் கொடுத்தார். தமாஷ் பேர் வழியான அந்த பாங்க் பொக்கிஷதார் ஐந்து, பத்து டாலர் நோட்டுகளையும் ஒவ்வொன்றாக அவரிடம் எண்ணிக் கொடுத்தார். நியூயார்க்கிலுள்ள தமது இல்லத்துக்கு எடிசன் சென்ற போது அவரது கிழிந்த சொக்காய் ஜேபிகளில் நோட்டுகள் நிறைந்திருந்தன. இப்பிரம்மாண்டமான பணம் பறி போகாமல் பார்த்துக் கொள்வதற்காக இரவு முழுவதும் அவர் தூங்கவே யில்லை. மறு நாட் காலை தமது வாழ்க்கையில் முதல் முறையாக பாங்க்கில் கணக்கு ஏற்படுத்திக் கொண்டார்.

1870-ம் வருட துவக்கத்தில் நியூயார்க்கில் தம்மிடமுள்ள பணத்தைக் கொண்டு தொழிற்சாலையொன்று ஆரம்பித்தார். இத்தொழிற்சாலையில் பதினெட்டுப் பேருக்கு வேலை கிடைத்தது. ஆரம்பத்திலே ஜெனரல் லெபர்ட்ஸின் கம்பெனிக்கு இயந்திரங்களைத் தயார் செய்து கொடுப்பதும் அவற்றை பழுது பார்ப்பதுமே எடிசன் தொழிற்சாலையின் வேலையாக விருந்தது. தமது சொந்த பிரிண்டர்களைச் சப்ளை செய்ய முப்பதினாயிரம் டாலர் பெறுமான 'ஆர்டர்' அவருக்குக் கிடைத்தது. இந்த வேலையைச் செய்து முடிக்க கை தேர்ந்த நிபுணர்களான சிப்பந்திகளை எடிசன் அமர்த்திக் கொண்டார். இச்சிப்பந்தி

களில் சிலர் அவர்களது ஜீவிய காலம் வரை அவருடன் சேர்ந்து உழைத்தார்கள்.

அப்போது அவருக்கு இருபத்து மூன்று வயது ஆயினும், அவரது சிப்பந்திகளுக்கு அவர் ஒரு 'முதியவர்' போலவே காட்சியளித்தார். அவரது வேலைகள் அனைத்திலும் அறிவு தேர்ச்சியும் அனுபவ முதிர்ச்சியும் பிரதி பலித்தன. அடர்த்தியான புருவத்தின் கீழே கூரிய கண்களும் அசாதாரண விசாலமான நெற்றியும் உடைய அவர் கறை படிந்த, கந்தை உடையுடன் தொழிற்சாலையில் அங்கு மிங்கும் அலைந்து திரிந்ததைக் கண்டவர் ஒவ்வொருவரும் முரட்டுப் பிடிவாத குணமுள்ள நாடோடி என்று தான் அவரைக் கருதினரேயன்றி அதிர்ஷ்ட தசையிலுள்ள தயாரிப்பாளர் என நினைக்க வில்லை. வேலை தேடி வந்திருந்த ஒருவர் ஸ்தலத்தைச் சுற்றிப் பார்த்ததும் அங்கு வேலை செய்வதில்லை என்று முடிவு செய்தார். பின்னர், ஒரு சமயம் அம் மனிதர் கூறியதாவது:– "கடையிலிருந்த ஒவ்வொருவரும்–அதிபர் உள்பட–உன்மத்தம் பிடித்தவர்கள் போலவே நடந்து கொண்டனர்."

எஜமானர் என்ற முறையிலே, தொழிற் சங்க இயக்கத்தினருக்குச் சஞ்சலம் அளிப்பவராக எடிசன் இருந்தார். உயர்ந்த படி சம்பளம் கொடுத்த அவர் தம்மைப் போலவே தமது சிப்பந்திகளும் கருமத்தில் கண்ணாக விருக்க வேண்டுமென விரும்பினர். கடிகாரத்தைக் கவனித்து காரியம் செய்பவர்களைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. தொழிற்சாலையிலே ஆறு கடிகாரங்களை வைத்தார். அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு நேரத்தைக் காட்டின!

இயந்திரங்கள் தயாரித்துக் கொடுக்க ஏராளமான 'ஆர்டர்'கள் குவிந்திருந்த சமயத்திலே தொழிற்சாலை இயந்திரத்திலே சிறு கோளாறு ஏற்பட்டது. பெரிய சிப்பந்திகளில் நால்வரை நிறுத்திக் கொண்டு கதவைத் தாளிட்டுப் பூட்டி விட்டு, கோளாறைச் சரிப்படுத்தி இயந்திரம் இயங்கச் செய்யும் வரை அந்த இடத்தை விட்டு அகலக் கூடாது என அவர்களுக்குக் கட்டளையிட்டார். அறுபது மணி நேரம் அவர்கள் கடுமையாக உழைத்தனர். பாத்திரத்தில் கொண்டு வரப்பட்ட பலகாரங்களைச் சாப்பிட்டுத் தரையில் சிறிது நேரம் கண் அயர்ந்து மற்ற நேரங்களில் 'கருமமே கண்ணாயினர்' எனக் கூடிய அளவுக்கு அவர்கள் அரும் பாடுபட்டனர். கடைசியில், இயந்திரம் இயங்க ஆரம்பித்தது. பெருமையுடன் வீடு திரும்பிய அவர்கள் வழியிலே எடிசனைத் திட்டிக் கொண்டே சென்றூர்கள்.

இந்தக் காலத்திலும் கூட எடிசன் சுறு சுறுப்பாக ஆராய்ச்சிகள் நடத்தி வந்தார். நாற்பத்தைந்து கருவிகளையும் சாதனங்களையும் அந்த இளம் வயதில் அவர் கண்டு பிடித்திருந்தார். மில்வாக்கியில்

கிறிஸ்டொபர் ஷோல்ஸ் என்பவர் 'டைப்ரைட்டர்' என்று சொல்லப் படும் ஒரு கருவியின் மரமாதிரி (Model) யை வைத்து பரிசோதனை நடத்தி வருகிறார் என்பதை யறிந்ததும் தந்திக் கம்பிகள் மூலம் எழுத்துக்களை அனுப்பக் கூடிய சாதனம் கண்டு பிடிப்பதில் அவர் மும்முரமாக முனைந்தார். நியூயார்க்கிற்கு ஷோல்ஸை அழைத்து, முதல் டைப்ரைட்டரைச் செய்து முடிப்பதில் எடிசன் அவருக்கு அநேக யோசனைகளும் கூறினார்.

தந்தி யனுப்பும் முறையை சாமுவேல் மார்ஸ் கண்டு பிடித்தது வாஸ்தவம் தான். ஆயினும், மார்ஸ் கூட அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத வகையில் அம்முறையில் எடிசன் புரட்சிகர மாறு தல்கள் செய்தார். ஒரே கம்பியில் ஒரே சமயத்தில் எதிரெதிர் திசை களில் இரு செய்திகளை அனுப்பும் சாதனத்தையும் ஒரே கம்பியில் ஒரே சமயத்தில் ஒரே திசையில் இரு செய்திகளை அனுப்பும் முறை யையும் அவர் கண்டு பிடித்தார். மேலும், ஏற்கனவே மற்ற கம் பெனிகள் பெற்றிருந்த ஏகபோக உரிமைக்குப் பங்கம் விளைவிக்காத முறையில் செய்திகளை அனுப்பும் முறையை உருவாக்கி "வெஸ்டர்ன் யூனியன்" கம்பெனியைக் காப்பாற்றினார்.

ஜே கல்டு என்னும் முதலாளி ஒருவர் "வெஸ்டர்ன் யூனியன் கம்பெனி"யுடன் போட்டி போட்டுக் கொண்டு தந்திக் காந்தம் சம் பந்தமாக ஏகபோக உரிமை பெற்றிருந்தார். எனவே, தந்தியை உப யோகிக்கும் கம்பெனி, கல்டுக்கு உரிமைப் பணம் ('ராயல்டி') செலுத்த வேண்டியதாயிற்று.

"வெஸ்டர்ன் யூனியன்" தலைவரான வில்லியம் ஆர்டன், எடிசனை அழைத்துப் பின் வருமாறு கூறினார்: "மின்காந்தம் (Electro-magnet) உபயோகிக்காமலேயே செய்தியனுப்பும் உபாயத்தை நாம் கண்டு பிடிக்க வேண்டியதாக விருக்கிறது. இந்த முயற்சியில் நீர் ஈடு பட வேண்டுமென நான் விரும்புகிறேன்." காந்தத்துக்குப் பதில் மின் சக்தியைப் பயன்படுத்தி இயங்கச் செய்யக் கூடிய மாட்டோ கிராப் (Moto Graph) என்னும் செய்தி யனுப்பும் மற்றொரு கரு வியை எடிசன் கண்டு பிடித்தார். இந்தக் கருவி இப்போது உபயோ கத்தில் இல்லை. தந்தி விஷயத்தில் தாம் பெற்றிருந்த ஏகபோக உரிமை முறிந்து விடவே, தமது உரிமையைப் பேணிக் காப்பாற்ற கல்டு அக்கரை எடுத்துக் கொள்ளாமலிருந்தார். எனவே, "வெஸ் டர்ன் யூனியன் கம்பெனி"யும் வழக்கம் போல பழைய கருவியின் மூலமே செய்திகள் அனுப்ப ஆரம்பித்தது. ஆயினும், புதிய தொரு உபாயம் கண்டு பிடித்தமைக்காக எடிசனுக்கு அக்கம்பெனி ஒரு லட்சம் டாலர் அளித்தது.

[தொடரும்]

# கீமியாயே ஸஆதத்து

## தமிழ் மொழிப்புரை

### 1-வது வால்யம்.

இந்த கிதாபில் உள்ள சில விஷயங்களாவன:—

1-வது, தன்னையும் தனக்கு ஆதாரமான தலைவனையும் அறியாமல் பின்னை யொன்றை தானென்றும் தலைவனென்றும் கருதுகிற பேர்களுக்கு இக்கிதாபு உணர்வை வரவைக்கும்

2-வது, அகாதார பதர் மொழிகளால் நிறைந்த சில அஞ்ஞான புத்தகங்களை மெஞ்ஞான பொக்கிஷங்களென மதித்து மருண்டு கிடக்கின்ற மதியீனர்களின் மனதைத் திருப்பும்.

3-வது, இகபரங்கள் இன்ன தென்றறியாமல் இலோக இச்சைகளிலேயே மூழ்கி இரவும் பகலும் இதற்கே தொண்டு செய்து பரலோக வாழ்க்கையைப் பற்றி சிந்திக்காதிருக்கிற பேதை மாந்தர்களுக்கு இகபர விருப்பத்தை யூட்டும்.

4-வது, இபாதத்து செய்கிறவர்களுக்கு சுன்னத்து ஜமாஅத்துகளின் இஃதிகாது, இல்மை தேடல், ஒலுவு, முழுக்கு, தயம்மம் முதலிய சுத்தி வகைகள், தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு, குர்ஆன் ஓதல், திக்று அவ்றாது இவைகளின் அஹ்காம்களும் அஸ்றாருகளும் சொல்லப்பட்டிருப்பதால், இது அமல் செய்கிறவர்களுக்கு மிகவும் பிரயோஜனத்தைக் கொடுக்கும். இதன் அருமை கிதாபைப் பார்த்தால் தான் அறியலாம்.

இதன் 1-வது வால்யத்தில் இபாதத்துகளுடைய பயானும், 2-வது வால்யத்தில் முஆமலாத்துடைய பயானும், 3-வது வால்யத்தில் முஹ்லிகாத்தின் பயானும், 4-வது வால்யத்தில் முன்ஜியாத்துடைய பயானும் அடங்கி யிருக்கின்றன.

1-வது வால்யம் புதிய அச்சு கலிகோ பைண்டு விலை ரூ. 3

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

(ரஹ்மத் பாகவி)

÷ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—"ஜனங்களே, நீங்கள் உங்களினினும் சிறந்தவரையே இமாமாக்கிக் கொள்வீர்களாக. ஏனெனின், இமாமானவர், உங்களுக்கும் ஆண்டவனுக்கு மிடையில் 'வக்கீலாக' இருக்கின்றார். ஆகையால், பரிசுத்த கஃபாவின் திசை நோக்கி, எச்சில் உமிழக் கூடியவனை கூட நீங்கள் இமாமாக்கிக் கொள்ளாதீர்கள்."

‡ இங்ஙன மிருக்க, 'நல்லவர், கெட்டவர் எல்லோர் பின்னாலும் நின்று தொழுதுக் கொள்ளலாம்' என்று வந்துள்ள ஹதீதானது பல ஹீனமான (லயீபான) தாகும். ஆகவே இது அத்தாக்ஷியாகக் கொள்வதற்கு ஏற்கத் தக்கதல்ல.

|| தொழுகையின் நேரம் மிச்சமாயிருக்கும் வரைக்கும், முக்ததீகள், இமாமின் வருகைக்காக காத்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

↑ தொழுகை முடிந்து ஸலாம் கொடுத்த பிறகு, இமாம் சாஹிப் சில சமயம் வலது புறமும், சில சமயம் இடது புறமும் திரும்பி உட்கார வேண்டும். எப்போதும் ஒரே பக்கமாக, வழக்கமாய் உட்காருவதில் ஷைத்தானுடைய பிரவேசம் உண்டாய் விடுகிறது.

பித்அத்துக்காரர், ஹதீதுகளை நிராகரிப்பவர், (ராபிலீ, ஷீயா போன்ற) இமாமியா கூட்டத்தினர்-ஆகியோர் பின்னால் (முக்ததீயாக) தொழுதுக் கொண்டால், அத் தொழுகை நிறைவேற மாட்டாது. ஆனால், ஒரு முஸ்லிமுடைய கொள்கையென்ன, கோட்பாடென்ன, என்று ஸ்பஷ்டமாகத் தெரியாத வரை, அவர் பின்னால் தொழுதுக் கொண்டால் அது நிறைவேறி விடும். வெறும் சந்தேகத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு, ஒரு முஸ்லிமுடைய இமாமத்தை நிராகரித்து விட்டுவிடுவது கூடாது.

---

÷ இப்னு மாஜா
‡ அபூதாவூத்
|| ஸஹீஹைன், மிஷ்காத்
↑ திர்மிதி

× பொதுவாக, இமாம் சாஹிப், தாம் ஓதும் கிராஅத்தை சுருக்கமானதாகவே செய்துகொள்ள வேண்டும். மேலும் தொழுகையை இலேசாக்கி வைக்க வேண்டும். ஏனெனின், பின் பற்றும் ஜமாஅத்தினரில், சிறியோர், பெரியோர், கிழவர், பலஹீனர், நோயாளி, (மல, ஜல விமர்சன) அவசிய முடையோர் மற்றும் எல்லா விதமான ஜனங்களும் தான் இருப்பார்கள். ஆனால் அவர், தனித்துத் தொழுதுக் கொள்ளும் போது, தொழுகையை எவ்வளவு நீளம் வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும்.

+ இமாம் சாஹிபுடைய காதில், ஒரு சிறு குழந்தை அழும் சப்தம் கேட்டு, அந்தக் குழந்தையின் தாய் தனது ஜமாஅத்தில் சேர்ந்து தொழுகிறாள் எனத் தெரிய வந்தால், அப்போது இமாம், உடனே கிராஅத்தை குறைத்துக் கொண்டு, தொழுகையை சீக்கிரமாகவே முடித்து விடவேண்டும்.

* ஆண் (இமாம்), வெறும் பெண்களுக்கு மட்டும் கூட, இமாமத்து செய்யலாம். † பெண் (இமாம்) பெண்களுக்கு மாத்திரம் தான் இமாமத்து செய்ய வேண்டும்.

÷ ஹஜ்ரத் ஆயிஷா நாயகி (ரலி) இமாமத்து செய்தார்கள்; அப்போது ஸப்பு (அணி)க்கு மத்தியில் தான் (இமாமாக) நின்று கொண்டிருந்தார்கள்.

‡ இதே விதமாக உம்முஸல்மா (ரலி)யும் பெண்களுக்கு இமாமத்து செய்தார்கள்; அவரும் பெண்களுக்கு மத்தியில் நின்று கொண்டு தான் தொழுகையை தொழவைத்தார்கள்.

மேன்மையான (சிறந்த) இமாம் இருக்கும் போது, பதவியில் குறைந்த வரை இமாமாக்கிக் கொள்வது சிறந்த காரியமாக மாட்டாது. ஆனால், இப்படி நிகழ்ந்து விடும் காலத்தில் தொழுகை, திருத்தமாகவும் நேர்மையாகவும் நிறைவேறி விடும். இதில் எவ்விதமான குறைபாடும் ஏற்படமாட்டாது.

‖ குறைந்த பதவியுடைய ஒரு மனிதர், இமாமத்து செய்து கொண்டிருக்கும் போது, வேறொரு உயர்ந்த பதவியுடைய மனிதர் வந்து விட்டால், தொழ வைத்துக் கொண்டிருக்கும் இமாம் முக்

---

× ஸஹீஹைன், மிஷ்காத்
+ ஸஹீஹைன், மிஷ்காத்
* புலூகுல் மராம்
† ரவ்லதுன் னதிய்யா
÷ அபூதாவூத், புலூகுல் மராம்
‡ ஐனீ ஷரஹ்
‖ நைலுல் அவ்தார்

ததியாகி, அன்னவரை இமாமாகச் செய்து கொள்ளலாம். ↑ மேலும், தொழுகையினுள், இமாமை ஏற்படுத்திக் கொள்வதும் ஜாயிஸ் ஆகும்.

ஒரு ஸஹாபி, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்குப் பின்னல் (முக்ததியாக) தொழுதுக் கொண்டிருந்தார். நாயகம், (ஸல்) அவர்கள் கிராஅத் ஓதும் போது சில ஆயத்துகளை (இடையில்) விட்டு விட்டார்கள். தொழுகை முடிவடைந்த பின், "நாயகமே கிராஅத்துக் கிடையில், தாங்கள் இன்னின்ன ஆயத்துகளை விட்டு விட்டீர்களே!" என்று எடுத்துரைக்கப்பட்டது. அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், (அந்த மனிதரை நோக்கி) "நீர் அப்போதே, அதை ஏன் எனக்கு ஞாபகப் படுத்த வில்லை?" என்று சொன்ஞர்கள். அதற்கு அவர், "ஒருக்கால், அந்த ஆயத்துகளை ஓதுவது 'மன்ஸூக்' (ரத்துச் செய்யப்பட்டதாய்) ஆய் விட்டதோ என்று நான் எண்ணிக் கொண்டேன்" என்று விண்ணப்பம் செய்தார்.

நபில் தொழுதுக் கொண்டிருப்பவர்களுக்குப் பின்னல், பர்ளு தொழுதுக் கொள்வது ஜாயிஸ் ஆகும். இதே போல், பர்ளு தொழுகை நிறைவேற்றுபவருக்குப் பின்னல், நபில் தொழுகை தொழுதுக் கொள்வதும் ஜாயிஸ் ஆகும்.

இமாம் சாஹிப் உயரமான இடத்தில் (மேடையில்) நின்று கொண்டு தொழவைப்பதும், முக்ததிகள் கீழே (தாழ்வாக) நின்று கொண்டிருப்பதும் சிறப்பான காரிய மில்லை. (பேணுதல் வேண்டும்).

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய திருச் செயல் கொண்டு இந்த விஷயம் ஊர்ஜிதமாயிருந்தாலும், இதை விட்டுப் பேணிக் கொள்வது மிகவும் நலவானதாகும். ஏனெனின், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இதை (சொல் மூலம்) அநேக சந்தர்ப்பங்களில் 'வேண்டாம்' என்று விலக்கி யிருக்கிறுர்கள்.

யாரேனுமோர் இமாம், அவசரக் காரிய பேர்வழியாக யிருந்து, ஸுன்னத்துக்கு உவந்த முறையில் தொழுகையை நிறைவேற்ருதவரா யிருந்தால், அவரை முதல் எச்சரிக்கை செய்ய வேண்டும். அதன் படி செய்தும் அவர் திருந்திக் கொள்ள வில்லையாயின், அவரை (வேலையை விட்டு) நிறுத்திவிட வேண்டும்.

‡ இமாம் ஸாஹிப், ஏதேனும் கஷ்டத்தின் காரணமாக உட்கார்ந்து கொண்டு தொழவைத்தால், முக்ததிகள் நின்று கொண்டே அத்தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

---

↑ புகாரி

‡ புகாரி, மிஷ்காத்.

(காத்திருந்தும்) இமாம் சாஹிப், மிகவும் தாமதித்து வந்தால், (அவருக்குப் பகரமாய்) வேறொருவரை இமாமாக்கிக் கொள்வது ஜாயிஸ் ஆகும்.

↑ தொழும்போது, ருகூவு, ஸஜ்தா, நிலைநிற்றல் முதலியவை களில் இமாமைக் காட்டினும் முந்திக் கொள்வது ஆகாத கருமமும் மிகவும் கெட்ட செயலும் ஆகும்.

† யாரேனு மொருவன், இமாமுக்கு முன்னால் தலையை உயர்த்து வானானால், கியாமத்து நாளில், அவனுடைய தலை கழுதை யுடைய தலை போலாகும்.

யாரேனுமொரு இமாம், முக்ததிகளுக்கு சௌகரியம் கருதா மல் இருந்தால் — தொழுகையில் மிகவும் பெரிய ஸூராவை ஆரம்பித் துக் கொண்டால் — அப்போது, முக்ததிகளில் அவசரத் தேவையுள்ள வர்களும் அயர்ந்து போனவர்களும், தொழுகை நிய்யத்தை முறித்து தனியே தொழுதுக் கொள்ளத் தொடங்கலாம்.

‖ தொழுகையில், இமாம் ஏதேனும் (முக்கிய அம்சமான) ‘ருகுனை’ நிறைவேற்றத் தவறி விட்டால், முக்ததிகள் ஆண் இமா முக்கு ‘ஸுப்ஹானல்லாஹ்’ என்று சொல்லியும், பெண் இமாமுக்கு கைதட்டி சமிக்ஞை செய்தும் எச்சரிக்கை செய்வது ஜாயிஸ் ஆகும்.

‡ ஒருவர் தொழுதுக் கொண்டிருக்கும் போது, மற்றொருவர் பின்னால் வந்து அவருடன் (ஜமாஅத்) சேர்ந்து கொண்டு தொழ விரும்பினால், வந்தவர், முன்னவரின் வலது புறத்தில் சற்று பின் தங்கி நின்று கொள்ள வேண்டும். அப்படி அவர் பின் தள்ளி நிற்காவிடில், இமாமே அவரைப் பின்னால் தள்ளி நிற்கச் செய்யலாம். அங்ஙனம் பின் தள்ளி நிற்க பின்னால் இடம் இல்லாமற் போனால், இமாமே கொஞ்சம் முன்னேறி நிற்கலாம். முன்னுக்குப் போகவோ, பின் னுக்கு வரவோ கொஞ்சமும் இட வசதியே இல்லாமற்போனால், எல் லோரும் சரிசமமாக (ஒரே வரிசையாக) நின்று தொழுதுக்கொள் ளலாம்.

* ஜமாஅத் சேர்ந்து தொழுதுக் கொள்வதாயின், ஆண் பாலார் களின் வரிசை முன்னாலும், பெண் பாலர்களின் வரிசை பின்னாலும் இருக்க வேண்டும்.

---

↑ முஸ்லிம், அன்ஸாரி.
† முஅத்தா இமாம் மாலிக்
‖ புகாரி.
‡ மஜாஹிரேஹக்
* மிஷ்காத்.

[தொடரும்]

---

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

# மஜ்மூஉ மவ்லூது.

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும் அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸெய்யதி ஷைகி, மதைஹ பைத்து, ஜுஹ்பி லுத்பிக முனாஜாத்தும், பீஹுப்பி ஸைய்யிதிறு பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது.

கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது விலை ரூ. 1-00

ஷை மூன்று மவ்லூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை ரூ. 1-80

# மஜ்மூஉஸ் ஸலவாத்து.

இப்புத்தகம் அல்லாஹுத் தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த **துஆ கன்ஜுல் அர்ஷும்** இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் க்ஷேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும் மற்றும் ஸலவாத்துக்கெல்லாம் தாயானதுமான **உம்மு ஸலவாத்தும்**, இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கௌதுஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் **கவ்திய்யா ஸலவாத்தும்**, இன்னும் ஸெய்யிதினா குத்புல் அக்தாபு வகௌதுல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் **மதாரிய்யா ஸலவாத்தும்**, இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்த்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை ரூ. 1-00

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1-00

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# மிப்தாஹுஸ்ஸலாஹ்
# பீ யீலாஹின்னிகாஹ்

(இப்புத்தகம் இல்லறவாசிகள் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது)

இதில் நிக்காஹுடைய வரிசைகளும், அஹ்காம்களும், ஸ்திரீ புருஷருடைய குணலக்ஷணங்களும், ஒவ்வொருவரும் இன்ன குணமுடையவர்களென்று பார்த்த மாத்திரத்தில் கண்டறியக்கூடிய வழியும், ஸ்திரீ புருஷர்கள் அவசியம் அறிய வேண்டிய அநேக ரகசியங்களும், ஒரு புருஷன் விரும்பிய மனைவியையும், ஒரு ஸ்திரீ விரும்பிய கணவனையும் அடைவதற்கு வேண்டிய இஸ்முகளும் அடங்கியிருக்கின்றன.

இவையன்றி ஸ்திரீ புருஷருக்கிடையில் முஹப்பத் உண்டாவதற்கும், ஹமல் உண்டாவதற்கும், ஹமலைக் காப்பதற்கும் அவசியமான இஸ்முகளும், ஹமலில் உண்டாகக் கூடிய பலவகை வியாதிகளுக்கு அரிய ஔஷதங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

முன் பதிப்பிலிருந்ததைவிட இப்பதிப்பில் அநேக அரிய விஷயங்களும் இஸ்முகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாசிப்போர்க்கே இந்நூலின் அருமை விளங்கும்.

புதிய பதிப்பு கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு

இதன் விலை ரூ. 3 – 00

கிடைக்குமிடம்:—

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்**

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ், 5.